# தலமும் விருட்சமும்



தொகுப்பாசிரியர். வ.சந்திரசேகரன்

# தலமும்* விருட்சமும்*

## கோட்டைக்கல்லாறு முருகன் ஆலய
## தல வரலாறும், பாடல்களும்

தொகுப்பாசிரியர்
வ.சந்திரசேகரன்

பதிப்பாசிரியர்
ச.மணிசேகரன்

# பதிப்புரை

மட்டக்களப்பு செங்குந்த குல மக்கள் கோட்டைக்கல்லாறு, ஆரையம்பதி, தாமரைக்கேணி ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். இவர்கள் தங்களுக்கான மூன்று ஊர்களிலும் பழமையான மாரியம்மன் கோயிலைக் கொண்டுள்ளதுடன் கோட்டைக் கல்லாற்றில் பலநூறு வருடங்கள் பழமை வாய்ந்த முருகன் கோயிலையும் ஆரையம்பதியில் பலநூற்றாண்டு பழமை வாய்ந்த திரு நீல கண்ட விநாயகர் ஆலயத்தையும் தாமரைக் கேணியில் நூற்றாண்டு பழமை வாய்ந்த வீரகத்திபிள்ளையார் ஆலயத்தையும் நிர்வகித்து வருகின்றனர்.

இதில் ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஆலயம், தாமரைகேணி வீரகத்தி பிள்ளையார் ஆலயம் என்பன பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் அப்போது இருந்த எமது குலப்பெரியவர்களால் எழுதப்பட்டு எழுத்து வடிவில் இருக்கிறது. பண்டிதர் வி.சீ.கந்தையா தொகுத்த மட்டக்களப்பு சைவக்கோயில்கள் வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இவ்விரு ஆலயங்களைவிடவும் பலநூறு வருடங்கள் பழமைவாய்ந்த கோட்டைக் கல்லாறு முருகன் கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் செவிவழியாக அன்றி எழுத்தில் வெளிவரவில்லை. எழுத்தில் வெளிக் கொணர வேண்டியது காலத்தின்தேவை. அதனை எங்கிருந்து தொடங்குவது என்று தடுமாறிய வேளையில் எமது தந்தையான வ.சந்திரசேகரன் அவர்களால் 1998இல் இத்தலத்தின் மீது பாடப்பட்ட சிலபாடல்களும் வரலாற்றுக் குறிப்பும் எம்கைவசம் கிட்டியது. இதனை ஆரம்பப் புள்ளியாக கொண்டு தொடங்கலாம் என்ற நம்பிக்கையில் இதனை நூலாக்க எண்ணம் கொண்டோம். இதிலுள்ள வரலாற்றுக் குறிப்பினை, அப்பா உயிருடன் இருந்தபோதே காலஞ் சென்ற மாரியம்மன் பிரதம பூசகர், வ.வீரகுலசிங்கம், காலஞ்சென்ற சோதிடர் வே.ஆறுமுகம், பண்டிதர் நாகலிங்கம் தற்போதைய தலைவர். வ்.வெற்றிவேல், க.யோகராஜா போன்றவர்களின் பார்வைக்கு அனுப்பி சரிபார்க்கப்பட்டவை. இவர்களுக்கு எமது நன்றிகள், இதனை தொடக்க அல்லது

மையப்புள்ளியாகக் கொண்டு இனிவரும் சந்ததிகள் அதனைப்பற்றி மேலும் விரிவாக ஆய்வு செய்து ஆவணப்படுத்த வேண்டும். ஏனெனில் இவ் ஆலயவரலாறே இக்குலத்தின் இருப்புப்பற்றிய வரலாறாக மாற்றமடையும்.

எமது தந்தையின் இறுதிக்கால ஆசைகளில் ஒன்று கோட்டைக்கல்லாறு முருகன் கோயில் குடமுழுக்கு வேளையில் இதனை நூலாக்கி வெளியிட வேண்டும் என்று பெருவிருப்பு கொண்டிருந்தார். இதற்கான செயற்பாடுகளில் 1998இல் ஈடுபட்டிருந்தார். 1999ல் மறைந்து விட்டார். காலஞ்சென்ற வீர குலமாமாவிடம் இருந்து கையெழுத்துப் பிரதி யோகமாமா மூலம் எம் கரம் கிட்டியது. இவ்வருடம் சித்திரை 26 குட முழுக்கு என்றதும் நானும் தம்பியும் உடனே புத்தகவிடயத்தை யோசித்தோம். மக்கள் தந்தைக்காற்றும் உதவி இதுவாகத்தான் இருக்கும் என்று உடன் பிறப்புக்கள் அனைவரும் இதற்கு கைகோர்த்தனர். நூல்முயற்சி முருகன் அருளால் நிறைவு பெற்றது.

இந்நூலுக்கான சிலபாடல்களை பலபேரிடம் கேட்டிருந்தும் ஒருவரைத் தவிர யாரும் உதவவில்லை. கலாபூணசம் மு.கணபதிப்பிள்ளை J.P. அவர்கள் அவர் இன்று உயிருடன் இல்லை. அவருடைய காவடிச் சிந்தும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பதுடன் அவரின் குடும்பத்தாருக்கும் குறிப்பாக க.நீதிராசா அவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றி களை தெரிவித்து மற்றும் இந்நூல் வெளியீட்டிற்கு ஆதரவு நல்கிய கோட்டைக்கல்லாறு ஸ்ரீ கந்த சுவாமி, ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலான சபையினருக்கும் குறிப்பாக தலைவர் திரு.வ.வெற்றி வேல், திரு.த.தயாபரன், திரு.சி.சௌந்தர ராஜன் ஆகியோருக்கும் ஆரையம்பதி, ஸ்ரீ திரு.நீலகண்ட விநாயகர், ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கும், தாமரைக்கேணி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கும் திரு.நா.புஸ்பநாதன், திரு.ப.லக்ஸ்மன் ஆகியோருக்கும் நன்றிகள்.

இந்நூல் வெளியீட்டின் மூலம் வரும் நிதியை முருகப் பெருமானுக்கே வழங்கவும். நூலுக்கு அனுசரனை வழங்கவும் முன்வந்த திரு.திருமதி.இராமன் மணிமொழி, திரு.திருமதி. ஜீவானந்தம் ஞானமொழி, திரு.தியாகசேகரன் ஆகியோருக்கும் மற்றும் ராஜசேகரன், அருள்மொழி, திருமதி.ரா.சந்திரசேகரன் ஆகியோருக்கும் முருகப்பெருமான் அருள்கிடைக்க வேண்டுகின்றேன்.

மட்டக்களப்பு இலக்கிய வரலாற்றில் எமது தந்தையின் தடத்தை சரியான முறையில் அழுத்திக்கூறவும் தேடலிலும் என்றும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவரும் இந்நூலுக்கான ஒரு அணிந்துரையினை வழங்கியவரும் எனது மதிப்புமிகு ஆசானுமான பேரா.செ.யோகராசாவிற்கும், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய காசுபதி நடராசாவிற்கு எமது நன்றிகள்.

எல்லாவற்றிக்கும் மேலாக கல்லாற்றுக்கே அடைமொழியாக வாழ்ந்து முருகா, முருகா என்று வாய் நிறைய உச்சரித்து கல்லாற்று மண்ணுக்கும் எமக்கும் பிணைப்பை ஏற்படுத்திய எங்கள் முன்னோடி கல்லாத்தப்பா (கிளாக்கர், சிற்றம்பலம், கணபதிபிள்ளை) அவர்களின் ஆத்மா கூட இந்நிகழ்விற்காய் எம்மை வாழ்த்தும் என்ற நம்பிக்கையுடன் எங்கள் குலதெய்வமான முருகப் பெருமானின் அருள் வேண்டி.

**அன்புடன்**

**ச.மணிசேகரன்.**

# முன்னுரை

சுமார் எண்ணூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனப் பேசப்படும் எங்கள் முருகன் ஆலயத்திற்கு எழுத்து மூலமான எந்த ஆவணங்களையும் எங்கள் மூதாதையர் தந்து செல்லவில்லை.

இக்குறையைப் போக்கும் முயற்சியில் இச்சிறுநூல் வெளிவருகின்றது. நான் நீண்டகாலமாக ஆய்ந்துகண்ட முடிபுகளை உள் அடக்கிய ஒரு வரலாற்றுக்குறிப்பையும் அடக்கி இத்தல முருகன் மீது பாடப்பட்ட சில பிரபந்தங்களையும் உள்ளடக்கி இச்சிறு நூல்வெளிவருகிறது.

இதனை எம் எதிர்காலச்சந்ததிக்காக ஆக்கிச் சமர்ப்பித்துள்ளேன். ஏற்று பயன்பெறுவது அவர்கள் கடமையாகும்.

முருகன் திருவருள் துணைநிற்குக!

**கொழும்பு - 15**
**12.08.1998**

**வ.சந்திரசேகரன்**
**(நூலின் தொகுப்பாசிரியர்)**

# அணிந்துரை

பலரால் ஆசிரியராகவும் சிலரால் அதிபராகவும் அறியப்பட்ட வ.சந்திரசேகரம் அவர்கள் பற்றிய இந்நூலிற்கு அணிந்துரை எழுத முற்படுகின்ற இவ்வேளையில் நாற்பதுகள் கால மட்டக்களப்பு பிரதேச சமூக, அரசியல், கல்விகலை, இலக்கியச் செயற்பாடுகள் பற்றிய நினைவுகள் கிளர்ந்தெழுவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏனெனில் அத்தகைய செயற்பாடுகள் பலவற்றோடு இவருக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்துவந்துள்ளன. இவை பலராலும் அறியப்படாதன இன்று நுணுகி நோக்கும்போது, நாற்பதுகளில் மட்டக்களப்பு சமூக, அரசியல், கல்வி, கலை இலக்கிய வளர்ச்சி ஓட்டத்திலே பாரிய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பிப்பது தெரியவருகின்றது. தமிழக திராவிட கழகச்செல்வாக்கு, கி.மு.க பிரமுகர்களின் வரவு கம்யூனிஸ்ற் கட்சியினரின் செயற்பாடுகளின் ஆரம்பம், தமிழரசுக் கட்சியின் தோற்றம், பகுத்தறிவு இயக்கம், என்பன ஒரு புறத்திலும், நாடகத்துறையின் மறு மலர்ச்சி பாரதி (மண்டூர்), உதயன் (மட்டக்களப்பு) முதலான இலக்கியச் சஞ்சிகைகளின் தோற்றம் என்பன மறுபுறத்திலும் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை சற்று முன்பின்னாக இயங்கிய வெலிங்ரன் புத்தகசாலை முதலியன இலக்கியச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாயிருந்தமை இன்னொரு புறத்திலுமாக, நாற்பதுகள் மட்டக்களப்பில் ஏற்படுத்திய நவீன மயவாக்கச் சூழல் முக்கியமானது!

மேற்கூறிய ஆரோக்கியமான கல்வி, கலை, இலக்கிய, சமூக அரசியல் சூழலில் உருவான முக்கியமான ஆளுமைகளுள் ஒருவரே வ.ச.சேகர் எனப்படுகின்ற வ.சந்திரசேகரம் அவர்கள்! மட்டக்களப்பு கலை இலக்கிய வரலாற்று உருவாக்கம் சந்திக்கின்ற அவப்பேறுகளுள் தலையாயது சூறாவளி, வெள்ளம் முதலான இயற்கை அனர்த்தங்களினாலும், இனக்கலவரங்கள், இடப்பெயர்வுகள் முதலான செயற்கை அனர்த்தங்களாலும் இக்கால ஆளுமைகள் பலர் தமது ஆக்கங்களைப் பறிகொடுத்துவிட்டு முகவரிகளற்று நிற்பதாகும்.

இவ்வாறான இலை மறை காய்களுள் ஒருவரே வ.சந்திர சேகரம் என்பது புகழுரையன்று 1954 தொடக்கம் 1987வரை ஆசிரியப்பணி புரிந்துவந்த சந்திரசேகரம் அவர்களுடன் எண்பதுகளில் சிலகாலம் ஹோல்புறூக் த.ம.வித்தியாலயத்தில் இணை ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கின்றேன். அவ்வேளை நெற்றியில் நீறும் நேர்வழியும் மாணவர்களோடு நெருப்பும் நீரும் ஆக வலம்வந்தவராக அவரை அறிந்திருந்தேனே ஒழியாது அவரது எழுத்தாண்மையை அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை. 'ஆ.தங்கன்' தினகரனில் அறுபதுகளிலே எழுதியிருந்த மட்டக்களப்பு சிறுகதை வளர்ச்சி தொடர்பான கட்டுரை ஒன்றிலே 'வ.ச.சேகர் என்ற பெயரிருப்பது கண்டு ஆ.தங்கனை வினாவியபோதுதான் அது எனது ஆசிரிய நண்பரும் உறவினருமான வ.சந்திர சேகரம் ஆசிரியர்தானென அறிந்து மகிழ்ந்தேன் தான் ஒரு எழுத்தாளராக இருந்தது மட்டுமன்றி, மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயின்ற காலத்திலே ஏனைய எழுத்தாளர்கள் உருவாக்கத்திற்கும் ஆக்க பூர்வமான முயற்சிகள் செய்திருப்பவராகவும் அவரை பின் நாளில் அறியநேர்ந்தது.

மண்டூரிலிருந்து 1948/49ல் வெளிவந்த 'பாரதி' சஞ்சிகைகள் எனது தேடுதல் வேட்டையில் சிக்கியபோது பாரதி இதழ் நாடளாவிய ரீதியில் நடத்திய சிறுகதைப்போட்டியில் வ.வ.சேகர் ஆறுதல் பரிசு பெற்றமைபற்றிய தகவல் வந்துசேர்ந்தது. கூடவே, அவரெழுதிய 'மன்னிப்பா' என்ற சிறுகதையும் பிரசுரமாகியிருந்தது. (இது பின்னியைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது)

வ.ச.சேகரது சமகால சிறுகதை எழுத்தாளர்களான சிவா (ஆசிரியர் வ.சிவசுப்பிரமணியம்) கமலநாதன் (வித்துவான் சா.இ.கமலநாதன்) ஆகியோரது சிறுகதைப் போக்குகளிலிருந்து விலகி இன்னொரு போக்கின் வெளிப்பாடாகவும் அச்சிறுகதை காணப்படுவது கவனத்திற்குரியது.

மட்டக்களப்பு பிரதேச இலக்கிய வரலாற்றிலே ஆரையம்பதிக்கு சிறப்பு இடமுண்டு.

மட்டக்களப்பினை தமிழ்நாட்டிற்கு இனங்காட்டியது ஆரையம்பதி எழுத்தாளர்களே, இத்தகைய ஆரையம்பதி எழுத்தாளர் பட்டியல் வ.ச.சேகரில்லாமல் முழுமைபெறாது என்பதையும் இவ்வேளை பதிவுசெய்வது விரும்பத்தக்கதே.

வ.ச.சேகரது எழுத்துலக, கல்வியுலக வாரிசுகளான 'திசேரா', மணிசேகரன் ஆகியோரதும் இனிய நண்பர் காசுபதி நடராசாவினதும் முயற்சிகளினால், இப்போது வ.சந்திரசேகரம் அவர்கள் முக்கியமான கவிஞரென்பதும், கட்டுரையாள ரென்பதும், ஆய்வாளரென்பதும், பன்முகத்தேடல் கொண்டவரென்பதும் இன்று சான்றாதாரங்களுடன் பதிவிற்குள்ளாகின்றன. குறிப்பாக, கோட்டை கல்லாற்று முருகன் ஆலயம் மீது தானும் ஏனையோரும் பாடிய பக்திப்பாமாலைகளை அவர் தொகுக்க முற்பட்டமை கோயில் வரலாற்று ஆய்வு சார்ந்த அவரது நுண்மான் நுழை புலத்தேடல் எத்தகைய உயர்வானதென்பதையும் அவசியமான தென்பதையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

உண்மைதான்! வ.சந்திரசேகரம் (வ.ச.சேகர்) அவர்கள் இலை மறைகாய் மட்டுமல்லர். இலைமறை கனியுந்தான். 'முயற்சி திரு வினையாக்கும் என்பது பொய்மொழியன்று. ஆதலின் வ.ச.சேகர் பற்றிய தேடுதல் தொடரவேண்டி வாழ்த்துகின்றேன்.



**பாராட்டுக்களுடன்,**
**பேராசிரியர். செ.யோகராசா**
**2014.03.26**

# கோட்டைக் கல்லாற்று முருகன் ஆலயத் தல வரலாற்றுக் குறிப்பு

இத்தலம் கி.பி. 12ம் நூற்றாண்டில் உருவானது என்று ஒரு குறிப்பும், கி.பி. 14ம் நூற்றாண்டில் உருவானது என்று மற்றொரு குறிப்பும் பரவலாக வழங்கப்பட்டு வந்துள்ளது. எம் காலத்தில் வாழ்ந்த மூதாதையர் கூறிய குறிப்புக்களையும் சம்பவங்களையும் ஆதாரமாக வைத்தே இவ்வரலாற்றுக் குறிப்பை எழுத ஆரம்பிக்கிறேன்.

எழுத்து வடிவிலான எந்த ஒரு ஆதாரமும் கிடைக்கவில்லை, எனினும், செவி வழிச்செய்தியாகச் சந்ததி சந்ததியாகப் பேசப் பட்டுவந்ததும், எம் காலத்தில் வாழ்ந்தவர்களும் நூறுவயதுவரை இம்மண்ணில் வாழ்த்து அமரத்துவம் அடைந்தர்களுமான இருவரிடமிருந்து நான் கேட்டு அறிந்து கொண்டவையும், இவர்கள் கூறிய குறிப்புக்களை ஆதாரமாகவைத்து, 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' 'சோழநாட்டுக் கருவூர் இராசதானி வரலாறு' என்பன போன்ற நூல்களில் இருந்தும், பொலநறுவையில் உள்ளதும் சோழமன்னனால் கட்டப்பட்டதுமான சிவன் கோயில் வரலாறு என்பவற்றில் இருந்தும் ஆங்காங்கே கிடைத்த குறிப்புக்களின் நிழலே இவ்வரலாற்றுக் குறிப்பாகும்.

கி.பி.12ம் நூற்றாண்டில் இரண்டாம் குலோத்துங்க சோழன் கருவூரை ராசதானியாக கொண்டு அரசாண்டான். என்பது தமிழ் நாட்டுச் சரித்திர வரலாறு ஆகும். இவன் காலத்தில் தான் கம்பர் 'ஏர்எழுபதும்' ஒட்டக்கூத்தர் 'ஈட்டி எழுதும்' பாடினர்கள்.

வேளாளர் பெருமையைப் பற்றிக் கம்பர் பாடியதனால், சோழமன்னனது வலக்கரமாக விளங்கி அவனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த 'தெரிந்த கைக்கோளப்படை' என்னும் படையினரான செங்குத்தரது பெருமையும் பாடப்படல் வேண்டும் எனக்குலோத்துங்கன் விரும்பினான். ஏன் எனில்; அவனும் அதே சமூகத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். அவனது குலகுருவாக செங்குந்தர் சமூகப்புலவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் விளங்கினார்.

எனவே, தன் ஆசானைக் கொண்டே பாடுவிக்க விரும்பி அவரிடம் பணிவாக ஒரு வேண்டுகோள் விடுத்தான். அதற்குப் புலவர் கேட்ட விலை செங்குத்தர் குல இளைஞர்கள் ஆயிரவரின் தலையாகும். அதற்கு அரசனும் சம்மதித்து தன்சமூகத்தினருக்குத் தலை கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

அதன்படி தலைகள் கொய்யப்பட்டு, கருவூர் இராசதானியை அடுத்து இருந்த துர்க்கை அம்மன் ஆலய முன்றலில் இளநீர் குவிப்பது போலத் தலைகள் குவிக்கப்பட்டன. அதன் மேல் இரத்தப் பாவாடை விரிக்கப்பட்டு அதில் ஏறி அமர்ந்து கூத்தர்பிரான் "ஈட்டி எழுபது" என்னும் நூலைப்பாடினார்.

பாடிமுடிந்ததும் அதிலிருந்து இறங்கிவந்து. துர்க்கையை வேண்டி 'எழுப்பு எழுபது' பாடினார் என்றும் அதனால் அந்த ஆயிரம் தலைகளும் உடலோடு ஒட்டி உயிர் பெற்றன என்றும் 'கருவூர் இராதானி வரலாறு' செங்குந்தர் பிரபந்தத்திரட்டு' என்பவற்றில் இருந்து அறிய முடிகிறது. இதனாலேயே வெறும் கூத்த பிரானாக இருந்த புலவருக்கு ஒட்டக் கூத்தர் என்றும் பெயரும் நிலைபெற்றது.

இ..து இவ்வாறிருக்க, அரசகட்டளைக்குப்பயந்து, தம் இளைஞர்களின் தலைகளைக் கொடுக்க விரும்பாத சிலர் நாட்டை விட்டு வெளியேறி காவிரிப்பூம்பட்டினம் வழியாக வந்து அங்கிருந்து மூன்று மரக்கலங்களில் ஏறித் தப்பிச்சென்றனர். அந்த மரக்கலங்கள் நடுக்கடலில் வைத்து புயற்காற்றினாலும் மழையினாலும் நீரோட்டத்தினாலும் எற்றுண்டு மூன்றும் வெவ்வேறு திசைகளில் தென்திசையாகச் சென்றடைந்தன. ஒன்று யாழ்குடா நாட்டைச் சென்றடைந்ததாம். அடுத்தது முல்லைத் தீவுக் குடாவைக் சென்றடைந்ததாம். அடுத்தது கோட்டைக்கல்லாற்றை அடுத்த கடற்கரை ஓரமாக ஒதுங்கியதாம்.

இப்படிக் கோட்டைக் கல்லாற்றை வந்தடைந்தவர்கள், அங்கேயே குடியேறி வைத்தியம், மந்திரம், சோதிடம் போன்றதுறைகளில் ஈடுபட்டதுடன் தம் குலத் தொழிலாகிய நெசவிலும் ஈடுபட்டனர். தம்முடன் கொண்டு வந்திருந்த முருகன் சிலையை ஒரு மரநிழலில் பந்தல்

அமைத்து அதன்கீழ்வைத்து வழிபட்டுவந்தனர். கந்த சஷ்டி இவர்களது பெருவிழாவாக இருந்தது.

காலவரையில் மரநிழல் சிறு கற்கோயிலாக மாறியது. செழிப்புற வளர்ந்த இச்சமூகத்தைச் சேர்ந்த சில தலைவர்கள் செப்பேடுகளில் இத்தலவரலாற்றை எழுதி ஏடகத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தனராம். காலம்மாறி நாட்டில் பஞ்சம் நிலவிய காலத்தில் நெசவு செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டபோது

**பாயைச் சுருட்டி வைத்தேன்**
**படமரத்தைக் குந்த வைத்தேன்**
**போறேண்டி அம்மா - நான்**
**புற தேசம் நான் போறேன்**

என் ஊரை விட்டுப் பிற இடங்கட்குச் சென்று, மந்திரம் வைத்தியம், சோதிடம் இவற்றின் மூலம் பொருள் தேடிவந்து குடும்பங்களைப் பராமரித்து வந்தனர்.

ஊரில் இருந்தவர்கள் கோயிலைப் பராமரிக்கக் கஸ்டப்பட்டு, கோயிற் பாத்திர பண்டங்களையும், அங்கிருந்த செப்பேடுகளையும் விற்றுக் கோயிலைப் பராமரித்தனராம். அதனால், செப்பேடுகள் வெறும் செம்பு விலைக்கு விற்கப்பட்டு அழிந்து போயின. வருங்காலத்தில் இவை ஒரு சரித்திரச்சான்று என்பதை ஏனோமறந்தனர்.

இச்சம்பவங்களை எம்காலத்தில் வாழ்ந்த கணபதி விதானையார் என்னும் பெரியவர் வாயிலாகவும், அவருக்குப்பின் நூறு வயதுவரை வாழ்ந்த குஞ்சு விதானையார் என்னும் பெரியவர் வாயிலாகவும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அடுத்த காலத்தில் கோயில் 'பாலஸ்தாபனம்' பண்ணப்பட்டபோது, அப்போதய தலைவர் திரு.பெ.பரசுராம முதலி J.P. அவர்கள் ஒரு நோட்டீஸ் அச்சிட்டு நிதி உதவி கோரி வெளியிட்டிருந்தார்கள். அதிலும், 12ம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட இரண்டாம் குலோததுங்க சோழன் காலத்தோடு தொடர்புடையது இக் கோயில் எனக்குறிப் பிட்டிருந்தார்.

அடுத்து, 14ம் நூற்றாண்டின் கதை என்ன எனப்பார்ப்போம். 14ம் நூற்றாண்டில் தான் சோழ மன்னன் இலங்கையைக் கைப்பற்றினான் என்று 'மகா வம்சம்' கூறுகிறது. தன் அரசுக்குப் பாதுகாப்பாக ஆங்காங்கே தன்படை வீரரைக் குடி அமர்த்தினான் என்றும் அப்படி குடி அமர்ந்தவர்களின் சந்ததியினரே தற்போது கோட்டைக் கல்லாற்றில் வாழும் செங்குத்தர் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

எப்படிப் பார்த்தாலும் பலநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது இவ்வாலயம் என்பது போன்ற குறிப்புக்களே வெளிப்படுகின்றன.

இ∴து ஒரு பூரணமானதும் முற்றும் சரியானதுமான ஒரு வரலாறு என்று ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், எனக்குப்பின் வரும் இளம் சந்ததியினர் இதனை மேலும் ஆய்வுகள் செய்து, ஆதாரபூர்வமான செய்திகளுடன் ஒரு பூரண வரலாற்றை எழுத இக்குறிப்புக்கள் உதவலாம் என்பதே என் நம்பிக்கையாகும்.

ஆங்கிலேயர் நாட்டைக் கைப்பற்றியபின் மட்டக்களப்புப் பிரதான பட்டின மாயிற்று கல்வியின் நிமித்தமும் உத்தியோக வாய்ப்பின் நிமித்தமும், ஆரைப்பற்றை, கோட்டை முனை (தாமரைக்கேணி) போன்ற இடங்கட்கு இடம் பெயர்ந்தும் வாழத்தலைப்பட்டனர். அங்கெல்லாம் இச்சமூகம் பரந்து வாழ்வதை இன்றும் காணலாம்

இவ்வரலாற்றுக்குறிப்பு மறுபரிசீலனை செய்யப்படல் வேண்டும். ஒரு பூரண ஆய்வு தமிழ் நாடுவரை சென்று நடத்தப்படல் வேண்டும். அப்போதுதான் முற்றும் பூரணமானதும் நிறைவானதுமான ஒருவரலாறு நம் கைக்குக்கிடைக்கும் என எண்ணுகிறேன்.

எம் வருங்காலச் சந்ததி இத்திட்டத்தில் வெற்றிபெற முருகன் திருவருள் முன் நிற்பதாக!

சுபம்.

**வ.சந்திர சேகரன்**
**06.08.1998**

## கோட்டைக் கல்லாற்று முருகன் மீது பாடப்பட்ட

1. புகழ்

தனதானத் தனதானத்
தனதானத் தனதான
தனதானத் தனதானத்
தனதானத் தனதான.

மதியால் வித்தகனாகி
மனதால் உத்தமனாகி
நிதியாலும் நிறைவாகி
நிலையாலும் உயர்வாகி

அதிஞானப் பரயோக
அருவாழ்வும் தருவாயே:
பதியாலே உயர்கோட்டைக்
கல்லாற்று முருகோனே!

தனந்தன தானத்
தனதன தானத் - தனதா
தனந்தன தானத்
தனதன தானத் - தனதான

வாவியும் கடலும்
அணையுறும் கோட்டைக் - கல்லாற்றில்
மேவியே வேலன்
தலமது கொண்டான் - மனம் நாடி

வன்னியும் வேம்பும்
ஆலொடு அரசும் - நிழலாக
துன்னிய சைவத்
திருவளர் பதியே - இடமாக

எண்ணிய எண்ணம்
எளிதினில் முடிக்கும் - இறையாக
நண்ணிய அன்பர்
கரமது குவிக்கும் - பெருமானே

தனந்த தானத்
தனதன தானத் - தனதான
தனந்த தானத்
தனதன தானத் - தனதான

மகபதி கேட்ட
வரமது தந்தாய் - குலம்வாழ
வலபதி மாழப்
போர்ப்படை ஈந்தாய் - ஜெகம்வாழ

ஜெகமதில் தேவர்
சிறையது மீட்ட - குமரேசா
மதகரி மாய்த்த
அரனருள் கொண்ட - சிவபால

அகந்தைகொள் சூரரை
வேரற மாய்த்து - அடிசாய்த்
சிவந்த குந்தப்
படையொடு சமரிடு - குகநேசா

உவந்து கோட்டைக்
கல்லாற் றுப்பதி - உறைவே
சிவந்த காலும்
தண்டையும் அழகிய - பெருமானே

தனந்த தானத்
தனதன தானத் - தனதான
தனந்த தானத்
தனதன தானத் - தனதான

கலியுக வரதா
கந்தா குகனே - சரவணனே:
வலியுறு நோய்கள்
மிக எமை வாட்டி - வதைப்படுத்த

திருமலி கோட்டைக்
கல்லாற்றுப்பதி - உறைபவனை:
மனதினில் ஏற்றித்
துதிசெயும் போது - காத்தருளே!

தனந்த தானத்
தனதன தானத் - தனதான:
தனந்த தானத்
தனதன தானத் - தனதான

ஐயும் தொடர்ந்து
அறிவும் மயங்கி - அலறுகையில்
உய்யும் படிநின்
சடாட்சர மந்திரம் - உச்சரிக்க

செய்யும் கோட்டைக்
கல்லாற் றுப்பதி - உறைபவனே!
உய்யும் படி எனை
வந்தாட் கொண்டு - அருளுவையே!

தனதானத் தனதானத்
தனதானத் தனதான:
தனதானத் தனதானத்
தனதானத் தனதான

படியாமற் படிகின்ற
பவம்தீரப் பகைதீர
மிடியாலே உழல்கின்ற
வினைதீர விடம்தீர

அடியாரை உனதாக்கி
அருள்தந்து அருள்வாயே:
கதியே என் உயிரான
கல்லாற்று முருகோனே!

தனதானத் தனதானத்
தனதானத் தனதான:
தனதானத் தனதானத்
தனதானத் தனதான

தொலையாத துன்பங்கள்
தொலைந்தோடத் துணைவாராய்
மிகையான சுகவாழ்வு
பலமாக அருள்தாராய்

நிலையான உனதன்பைத்
தினம்நாடி வருவேனே
கலைமேவும் கல்லாற்றின்
கதியான முருகோனே!

தந்தன தான - தனதான:
தந்தன தான - தன தான
பக்தி செலுத்திப் - பணிவேனே
முத்தியை தந்து - அருள்வாயே

அந்தியும் சந்தியும் - அருகாக
அருள்பெற வேண்டி - வருவேனே
எந்தனை ஆளும் - குமரேசா
எனைத்தினம் காக்கும் - பெருமாளே!

தந்தன தான - தனதான
தந்தன தான - தனதான
கற்பக தருவாய் - நீ இருக்க
கவலைகள் ஏனோ - அறியேனே

பொற்பதம் பற்றித் - துணிவாக
எப்பொழுதும் உனைப் - பணிவேனே
நற்பதம் தாராய் - என்வாழ்வின்
நாயகம் ஆன - பெருமாளே!

தானதன தன தானதன தன
தானதன தன தானதன தன
பாதிமதி அணி பரமனின் பாலா
சோதிமணி மலர் வாய்திற வாயோ!

மோதிளமை மிக வாட்டிடும் நோயை
சாடிடு நாடிடு சற்குண நேசா
நீதிவழி எமை நிலைபெற வைப்பாய்
ஆதியில் கல்லாற்றுப் பதிவளர் கோவே

வ.சந்திரசேகரன்.
03.08.1998



# 2. திருவிருத்தம்

இரங்கிட வேண்டும் எங்கள்
இன்னல்கள் மாய்ந்து போக
துலங்கிட வேண்டும் உந்தன்
தூயநற் சோதி எங்கும்
பரந்திடல் வேண்டும் தூய
பக்தியின் பெருக்கம் நாட்டில்
வரந்தரல் வேண்டும் கோட்டைத்
திருப்பதி அமர்ந்த கோவே!

பரங்கியர் கோட்டை - கட்டிப்
பகைப்புலம் வென்ற தாலே
நிரம்பிய செல்வக் கோட்டைத்
திருப்பதி இ∴தென் பார்கள்
தகர்ந்த அக்கோட்டை போலத்
தகர்ந்திட வேண்டும் துன்பம்
நிரம்பிய செல்வம் மீண்டும்
நிறைந்திட வேண்டும் தேனே.

கரங்குவித் திறைஞ்சு கிறோம்
காத்தருள் கந்த வேளே!
பதம்உன தன்றி வேறு
பதம் எமக்கில்லை ஐயா!
மனத் துயரங்கள் நீக்கி
மலர்ப்பதம் தந்து காப்பாய்
தினைப்புன வள்ளி பங்கா
தேவரைக் காத்த தேவே!

**வ.சந்திரசேகரன்**

**01.08.1998**

# 3. காவடிச்சிந்து

## காப்பு

கல்லாற்று முருகன்மேல் கவிநான்பாட
கஜமுகனே என்கவிக்கு காப்பு நீயே!

1. கல்லாற்றுப் பதிவளரும் கந்தவேளே
கருத்துடனே உனதுபதம் சிரமேற்கொண்டேன்.
சொல்லாமல் சொல்லுகிறேன் துயரம் கேட்பாய்!
சொல்லாற்றல் மிக்கொரு புலவன்அல்லேன்
கொல்லாமல் கொல்லுகிறார், மனிதவாழ்வை
கூறுகிறேன் 'செம்மணியே' இதற்குச் சாட்சி
பொல்லாத இப்பழியைப் போக்கவென்று
புனிதமயில் ஏறிவந்து இரட்சிப்பாயே!

2. இல்லாத இனபேதச் சண்டை இங்கே
எதற்கெடுத்தும் துப்பாக்கிக் கலைதானுண்டு;
அன்றுடன் தினச்சேதி இதுதான் ஐயா!
அழியாமல் அழிக்கிறார் தமிழர் வாழ்வை
எல்லோரும் ஒருகுலமாய் ஒன்றுசேர
உதவுவது உன்கடமை கார்த்திகேசா!
நில்லாதே: உன்அருளை நிறுத்த வேண்டாம்
சினைவோடு எம்மினத்தைக் காக்க வாராய்!

3. தமிழ்காத்த தெய்வமென உனைச் சொல்வார்கள்
தரணியிலே உன்பெருமை மெத்த உண்டு;
தமிழினத்தைக் காப்பதற்கு ஏன் தயக்கம்?
தயவுடனே நீனருனை காட்டவேண்டும்
அமிழ்தினிய தமிழ்காத்த அமரதேவா!
அழிவினின்றும் தமிழினத்தைக் காக்கவாராய்:

உயிர்போக்கும் ஆயுதங்கள் ஒழிய என்றே
உன்கருனை மழைபொழிய விரைந்துவாராய்!

4. அசுரர்களை முன்னொருகால் அழிக்கவென்று
ஆட்படையும் வேற்படையும் கொண்ட கோவே!
அன்புமனம் கொண்டெம்பால் கனிந்திரங்கி
ஆர்வமுடன் மயிலேறிப் பறந்து வாராய்!
துன்பமெலாம் போக்கவெனத் துணிந்து வாராய்:
துயர் துடைக்க எமக்காகப் பரிந்து வாராய்!
கல்லாற்றுப் பதிவாழும் கந்தா உன்னைக்
கரம்கூப்பி இறைஞ்சுகிறோம் வருகுவாயே!

5. பரம்குன்றின் பதிஅமர்ந்த பழனிவேலே
பக்தியுடன் உனதுபதம் போற்றிநின்றோம்:
சிரம்கொய்து அசுரர்களை அழித்தவேலே
சிரம்தாழ்த்தி உனதுபதி தேடிவந்தோம்.
வரும்துன்பம் அத்தனையும் மாய்ந்து போக
வரம்தருவாய், முருகோனே! சக்திமைந்தா:
சிரம் மீது காவடியும் தூக்கிநொந்தோம்
சிந்தைமிக இரங்கிஎமை இரட்சிப்பாயே:

6. சத்தியம்சேர் அகிம்சை எனும் ஆயுதத்தால்
சாத்துவிகப் போரினிலே வெற்றிகண்ட
உத்தமனார் காந்தியைப்போல் மற்றோர்காந்தி
இத்தலத்தில் எம்மிடையே பிறக்க வேண்டும்.
ஒத்தமனப் பான்மையுடன் நாம் எல்லோரும்
ஓர்குலமாய் ஓர்இனமாய்த் திரளவேண்டும்
அத்தினமே எம்மவர்க்கு உய்யும்நாளாம்:
அறம் காக்கத் திருமுருகா வருகுவாயே!

7. மற்றுநிகர் இல்லாத வள்ளிபங்கா
வந்துனது சந்நிதியில் மனதன்பாக:
பொற்பதத்தைத் துதித்து நின்றோம் துயரம் தீர்ப்பாய்:
பொன்மயிலின் மீதமர்ந்து இன்னல்காப்பாய்:
கற்பகமாய் கண்மணியாய் எம் இனத்தை
காப்பதற்கு வேண்டி அவ தரித்தகோவே
நற்பதியாம் கல்லாற்றுக் கந்தாஇன்றும்
நன்மனதால் இரட்சிக்க வருகுவாயே!

8. வேண்டுவது உன்கருணை அன்றிவேறு
வையகத்தில் வேறெதுவும் வேண்டாம் ஐயா!
தோன்றியேநின் பொற்பாதம் தந்துகாப்பாய்
தோகைமயில் மீதமர்ந்த செந்தில்வேலே!
உய்யவழி செய்வது உன் கருணை ஐயா:
உறுதுணையாய் நின்று எமைக் காக்கவாராய்:
கையுயர்த்திச் சிரம்மீது குவித்து நின்றோம்
கல்லாற்றுப் பதிஅமர்ந்த கதிரைவேலே!

9. சத்தியமாய் தமிழ்காத்த அமரதேவா,
எத்திசையும் எம்மவரைக் காப்பதற்கு
உத்தமனார் காந்திவழி நின்று நாங்கள்
உயிர்உய்ய நீகருணை காட்டவேண்டும்
அரசியலாம் சாக்கடையில் நின்றும் நீங்கி
அகிம்சை எனும் ஒரு கொடிக்கீழ் ஒன்று சேர
பரசிவனார் பார்பதியாள் பெற்ற பாலா
பரிந்தெமக்கு மனமுவந்து அருள்செய்வாயே!

10. கல்லாற்றுக் கோட்டைநகர் கடிதில்வந்தோம்
கனகமயில் ஏறிவந்து காக்கவேண்டும்

சொல்லாலும் செயலாலும் எண்ணத்தாலும்
சுத்தமுள்ள பக்திநெறி அருளவேண்டும்
எல்லோரும் உனதுபதம் துதித்து நின்றோம்
எமைக்காக்க விரைந்தோடி வருதல்வேண்டும்
பல்லோரும் போற்ற இங்கு மயில்மீதேறிப்
பரிந்தெமக்கு முன்வந்து தோற்றுவாயே!

11. கல்லாற்றுப் பதி அமர்ந்த கந்தாபோற்றி!
கருணை எமக் கீகின்ற கருணா போற்றி!
வல்லாற்றல் மிக்கசிவ பாலா போற்றி!
நல்லவளாம் வள்ளி இணை தோழா போற்றி!
தேவர்குலம் காத்தருளும் தேவா போற்றி!
தாவிமயில் மீதமரும் தலைவா போற்றி!
பாவவினை அறுக்கின்ற பாலா போற்றி!
சேவற்கொடி உடையானே போற்றி போற்றி!

**வ.சந்திரசேகரன்**
**10.08.1998**



# வேலும், மயிலும், துணை

## திருமுருக திருப்பதிகம்

## காவடிச்சிந்து

1. அருள் புரிவாய் கரிமுகனே! ஐயன் எங்கள்
அழகேசன் குமரன் மேற் சிந்து பாட
ஒரு பிழையும் வாராது திறமையான
ஓங்கார தத்துவத்தின் அருளும்வேனும்
பெருமை செறி திருமுருக வள்ளியம்மை
பேர் பெருகு கோட்டைக்கல்லாறமர்ந்து
வருதுயரம் மாற்றியருள் வடிவேல் ஐயா!
வந்து நல்ல உதவியுடன் வரமும் தாராய்.

2. ஆகாயம் பூமியெல்லாம் உந்தன் சக்தி
அணுவாகப் பரந்திருந்து அடியார்க்கெல்லாம்
நோகாத வாழ்வுதர வேண்டுமையா
நுண்ணிடையாள் வள்ளியுடன் ஓடிவந்து
சாகாத நாளில்லை எங்குலத்தோர்
தரணி தன்னில் அடையாத துன்பமில்லை
வேகமுடன் வள்ளியுடன் மயில்மீதேறி
வேலவனே! வந்து துயர் தீராய் ஐயா!

3. இலங்கையுள்ள குன்றெல்லாம் ஏறி ஓடி
இன்னல்களைத் தீர்த்துவைக்கும் இளைய கோவே
கலங்குகிறார் மக்களுந்தன் கருணைதேடிக்
காற்றினிலே அலைந்து திமி பஞ்சைப்போல
நலந்திகளும் குமரேசா! நாடிவந்து
நல்லருளை எங்களுக்குத் தாராய் ஐயா
குலம் நிறைந்த கல்லாறு கோயில் கொண்ட
குமரேசா! உனதருளைத் தாராய் ஐயா!

4. ஈஸ்வரனார் புத்திரனே! உந்தன் கீர்த்தி
இல்லாத இடமுண்டோ இந்த நாட்டில்

ஆசுகளை ஒளிவேலைக் கைப்பிடித்து
அருள் வடிவே தாமதியாதோடி வந்து
வீசுகின்ற ஒளியாலே துயரமெல்லாம்
வேதனையும் தீராதோ? மனது வைத்தால்
கூசாமல் வேல் எடுத்தே ஓடிவந்தே
குறக்கொடியின் மணவாளா! காரும் ஐயா!

5. உத்தமனே! கதிர்வேலா! சிவனார்மைந்தா!
ஓங்காரத் தத்துவத்தை உலகிற் கீந்தாய்
பத்தியுடன் உந்தனையே துதிப்போர்க்கெல்லாம்
பாரினிலே நற்கதியை ஈந்துவந்தாய்
சித்தமெல்லாம் நோகுதையா இந்த நாட்டில்
தீராத பிரச்சினையால் வாடி மக்கள்
அத்தனே! துயர்தீராய் என்றழைத்தோம்
அழகனே! ஓடிவந்து அருள் செய் ஐயா!

6. எங்குலமே உன்னருளை நாடி நிற்க
ஏனென்றும் கேளாமல் இருப்பதேனோ?
பொங்கிவரும் துயரமதை அறிந்துமின்னும்
பொறுமையுடன் பார்த்திருப்பதேனோ ஐயா
மங்களமாய் நாம் வாழ வழிசெய்யாயோ
மனமின்னும் மாறலையோ? கெதியில் வந்து
எங்கள் துயர் தீருமையா! தேவர் துன்பம்
இல்லாமல் ஆக்கி வைத்த ஈசன்மைந்தா!

8. ஏடெழுத் முடியாதே உந்தன் கீர்த்தி
எண்ணிடிலும் அடங்காதே உந்தன் அன்பு
பாடிடவே முடியாதே உந்தன் வீரம்
பகரவெண்ணா உன்திறமை பாருளோர்க்கு
ஓடி எங்கும் கொடுமை செய்த சூர்குலத்தை
ஒழித்த செயல் அறியோமோ? உமையாள் மைந்தா!

வாடுகின்ற மக்களது துயரம் தீர்க்க
மால்மருகா! ஓடிவந்து வழி செய் ஐயா!

9. ஒளியாகி, வளியாகி உணர்வுமாகி
ஓங்கார தத்துவத்தின் மூலமாகி
வழிகாட்டி எங்களையே வாழவைக்கும்
மால்மருகா! துயர் தீர்க்க வாராய் ஐயா!
துளியேனும் நிம்மதியே! எங்கட்கில்லை
தோகை மயில் ஏறிவந்து துரிதமாக
அழியாத வாழ்வுதர மயில்மீதேறி
அப்பனே! ஓடிவந்து அருள் செய்வாயே

10. ஓங்கார, சங்கார வேலே கொண்டு
உதவாத செயவழிக்க வந்த பாலா!
நீங்காத துயருடனே வாழுகின்றோம்
நிம்மதியை எங்களுக்குத் தாருமையா
பாங்கான கோட்டைக்கல்லாறு என்னும்
பதிவந்து தங்கியிருந்து அருளே செய்து!
ஓங்கிய நற் பெருவாழ்வு வாழ்வதற்கே
உதவிதர வேண்டுகிறோம் உமையாள் மைந்தா

**நிறைவு**

கோட்டைக்கல்லாற்றுத் திருமுருகன்
அருள்வேண்டிய பதிகம் காவடிச்சிந்து

பாடலாக்கம் : கவிஞர் கல்லாறன்
விலாசம்: கலாபூசனம் மு.கணபதிப்பிள்ளை J.P
மட்/கோட்டைக்கல்லாறு.

# மதியால் வித்தகனாகிய தமிழாசிரியர் அமரர். வன்னமணி சந்திர சேகரன் பற்றிய நினைவுப் பரல்கள்

இலக்கிய முன்னோடியாக "ஆரையம்பதியைச் சேர்ந்த திரு சந்திரசேகரன், 'சேகரன்' - என்ற பெயரில் 1940களில் சிறுகதை, கட்டுரை கவிதை என எழுதியவர். என அறிகிறோம். இவர் தனது காலத்தில் முக்கியத்துவம் பெற்ற ஒரு எழுத்தாளராகக் கருதப்பட்டவர். ஆனால் அவர் நீண்டகாலம் எழுதாமல் ஒதுங்கியிருந்தமையாலும் தனது காலத்து எழுத்தாக்கங்களைப் பேணி வைக்கத்தவறிய காரணத்தாலும் இவரது இலக்கியப்படைப்புக்கள் பற்றி அதிகம் அறிந்து கொள்ளமுடியவில்லை.

இவர் அமரர் பண்டிதர் பூபாலபிள்ளை அவர்களின் சில கட்டுரைகளைச் சேர்ந்து நூலாக்கும் முயற்சியில் ஒரு காலத்தில் மும்முரமாக இருந்தார் ஆனால் அம்முயற்சி கைகூடவில்லை.

இவர் தனது மாணவப்பருவத்தில் சில கையெழுத்துப் பத்திரிகைகளையும் நடத்தியுள்ளார். "பாலர் மலர்" "இளைஞன்" (மட்/ மத்தியகல்லூரியல்), "தமிழன்" (மட்/ஆசிரியபயிற்சிக் கல்லூரியில்) என்பனவாகும்.

ஆசிரியரானபின் "ஈழச்சுடர்" என்றபத்திரிகையை நடத்தியுள்ளார். பிரபல எழுத்தாளர்களான நவம், தங்கன், காசியானந்தன், ஆ.பொன்னுத்துரை போன்றோர் இதில் பங்களிப்புச் செய்துள்ளனர். சுமார் 18 சிறுகதைகள் அச்சில் வெளிவந்தன என அறிய முடிகிறது.

கவிஞர் புரட்சிக்கமால் (ஏறாவூர்), கு.த.மூர்த்தி (மண்டூர்), கவிஞர் நிலாவணன் முதலாயினோர் இவரது சமகாலத்தவர்களாகும். 1957 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் 1978 நவம்பரில் ஏற்பட்ட சூறாவளியிலும் இவர் சேகரித்து வைத்த ஏராளமான நூல்களும், பத்திரிகை துணுக்குகளுக்கும் அழிந்து போனதில் மிகவும் விரக்தியடைந்து எழுத்துத்துறைக்கு அவர் முழுக்குப் போட்டுவிட்டார். அன்புமணி ஆரையம்பதியின் நவீன இலக்கிய வளர்ச்சி பற்றிக்குறிப்பிடுகையில் "மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏறத்தாள ஐம்பதுகளில் (1950) சிறுகதை தோற்றம் பெறுகிறது. இதன்

உருவாக்கத்தில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசலைக்கு முக்கியதோர் இடமுள்ளது. இவ்வேளை 'வ.சி.சேகர் (வ.சந்திரசேகரம்) என்பவர்தாமும் சிறுகதைகள் சில வற்றை எழுதியதுடன், தம்முடன் கல்விகற்ற வேறு சில ஆசிரியர்களையும் எழுதத்தூண்டினார் என அறிய முடிகிறது. இவர் ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்' என்று கலாநிதி செ.யோகராசா குறிப்பிட்டுள்ளார். (ஆரணி பொன்விழா சிறப்புமலர் - 2008 மட்/ஆரையம்பதி மகாவித்தியாலயம் - பக்கம் - 21)

**விமர்சனமாக....**

அன்புமணி, கலாநிதி செ.யோகராசா ஆகிய இருவரதும் மேலுள்ள விமர்சனங்கள் நூலாசிரியரின் ஆற்றல் மேம்பாட்டையும், அவர் சந்தித்த இடர்பாடுகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

**மரபிலக்கியச்சூழல்**

நூலாசிரியரின் வாழ்க்கைத் தேடலில் அவர் வாழ்ந்த சூழல், பெற்ற கல்வி முதலியன மரபிலக்கியப்பண்பியலைக் கொண்டதாக அமைந்துள்ளதைக் காணமுடியும்.

செங்குந்தர் மரபில் தாமரைக் கேணியில் வாழ்ந்த ஆ. சபாபதிப்பண்டிதர், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் தமிழாசிரியர் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் வீ.சு.கந்தையா, அவர் துணைவி கங்கேஸ்வரிகந்தையா மற்றும் கமலபூஷணி திரு நாவுக்கரசு முதலானோர் தென்படுகின்றனர்.

இவ்வட்டத்தில் கவிஞர் புரட்சிக்கால் (ஏறாவூர்), கு.த.மூர்த்தி (மண்டூர்) மற்றும் கவிஞர் நிலாவாணன் முதலான இலக்கியவல்லாளர்கள் இவரைச் சூழ்ந்தவர்களாக அறியப்படுகின்றனர்.

**இலக்கிய வாரிசுக்கள்:-**

இவரது இலக்கியவாரிசுக்களாக இருவகைப்பட்ட உறவாளர்களை காணமுடிகிறது. ஒன்று இலக்கிய சிந்தனையாளர்களாக உருப்பெற்றெழுந்துள்ள அவருடைய புதல்வர்களான மணிசேகரன் (கல்லூரி அதிபர்) மற்றும் 'திசேரா' என இலக்கிய உலகுக்கு

அறிமுகமாகியுள்ள தியாசேகரன் ஆசிரியர் இவர்கள் இருவரும் நூலாசிரியரின் நேரடிக்குடும்ப இலக்கியவாரிசுக்கள்.

மற்றையது அவர் நடத்திய ஈழச்சுடர் "பாலர் மலர்: தமிழன் முதலான பத்திரிகைகளில் எழுத்துலகப் பிரவேசத்தை ஆரம்பித்தவர்கள். எழுத்தாளர்களான 'நவம்', தங்கன் மற்றும் ஆ.பொன்னுத்துரை, போன்றோரைக் குறிப்பிடமுடியும்.

**வாழ்வியல்:-**

மட்டக்களப்பு தாமரைக் கேணியைப் பிறப்பிடமாகவும், ஆரையம்பதி செங்குந்தர் வீதியை வசிப்பிடமாக கொண்டவர் நூலாசிரியர் 19.09.1927 இல் பிறந்து 30.01.1999ல் அமரத்துவம் பெறும்போது அகவை 72.

அவரின் பெற்றோர் வன்னமணி, அரசம்மா தம்பதிகளாவர். 'இராஜமணி', என்பவரை திருமணம் செய்து கொண்டவர். இராஜசேகரம், அருள்மொழி, மனிசேகரன், மணிமொழி, ஞானமொழி மற்றும் தியாகசேகரன் ஆகியோர்கள் இவரின் புதல்வர்களாவர்.

இவர் மட்/சென் செபஸ்ரியார் வித்தியாலயம், மட்டக்களப்பு மத்திய கல்லூரி முதலியவற்றில் தனது ஆரம்ப இடை நிலைக்கல்வியைக்கற்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து பயிற்றப்பட்ட தமிழாசிரியரானவர்.

இவர் கொழும்பு ஒபயசேகரா தமிழ் வித்தியாலயம் - கண்டி பள்ளேகல, கலஹா, புசல்லாவ - நுவரெலியா ஹோல்புறூக் மட்டக்களப்பு ஐயங்கேணி, கறுவாக்கேணி, கரடியனாறு, வந்தாறுமூலை, ஆரைப்பற்றை, முறக்கொட்டான்சேனை ஆகிய இடங்களில் கற்பித்தவர் இதனால் இவரது பார்வை அகன்று விரிந்ததாயிற்று.

1980களின் பிற்பகுதியில் சிலகாலம் கல்லடி உப்போடையில் இவர்களது குடும்பம் வாழ்ந்த போது இவரது குடும்பத்துடனான கல்வித் தொடர்பு ஒன்று எமக்கு ஏற்பட்டிருந்தது. சுமாரான தோற்றத்துடன் வெண்ணிற ஆடை அணிந்து மிகவும் அழகான தோற்றத்தில் நான் அவரைக் கண்டிருந்தேன். ஆழ்ந்த சிந்தனையும் ஒரு மெல்லிய இள நகையும் கூடிய முகபாவத்துடனே இவரைக் கண்டிருக்கின்றேன். சமகாலச் சூழலின் அழுத்தங்களிலிருந்து அவர் விலகியிருக்க முனைந்து

கொண்டிருப்பதைக்காண முடிந்தது. அது இந்திய சமாதானப்படையினர் நிலை கொண்டிருந்த காலமாகவும் ஒருவித உள்ளார்ந்த நெருக்கடிகள் மிகுந்தகாலமாகவும் இருந்த ஒரு சூழல் நிலவியது.

**நூலும் மரபும்:-**

ஆரையம்பதியில் நூற்றண்டுகளுக்கு மேற்பட்ட இருப்பியலைக் கொண்டது செங்குந்தர் மரபு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, தாமரைக்கேணி மற்றும் கோட்டைக்கல்லாறு முதலிய இடங்களில் இவர்களது பரம்பரை வாழ்கின்றனர். மட்டக்களப்பிலுள்ள உயர்கல் வியிலாளர்களும், தமிழ்ப்பண்பாட்டை இறுகப்பற்றிக் கொண்ட வர்களாகவும் இச் சமூகத்தைக்காணமுடியும். பதிவுகள் கிடைப்பதில் இடையூறுகள் இருந்ததால் இச்சமூகத்தின் பண்பாட்டியலைப் பற்றிய ஆய்வுகள் இதுவரை மேற் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆயினும் மட்டக்களப்பு கலை, இலக்கியம், கல்வி மற்றும் பொருளியல் வரலாற்றில் இவர்களின் தடம் ஆழப்பதிந்துள்ளது. மேலும் ஆய்வு செய்யப்படவேண்டியவைகளாகும். அப்படியான ஆய்வுகளுக்குத் துணையான நூல் ஒன்றின் பதிவாக இந்நூலையும் இதன் ஆசிரியர்வாழ்வியலையும் கொள்ளமுடியும்.

ஆன்மீகம், இலக்கியம் இரண்டினூடாக இதனை நோக்கும் போது இதிலுள்ள 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்திகளை உய்த்துணரமுடியும் கோட்டைக் கல்லாற்றின் முருகப் பெருமானின் அருட்கடாட்சமே அவ்வூர் மக்களின் செல்வச் செழிப்பிற்கும், கல்வித்துறை மேன்மைக்கும் வழிவகுத்தது என்பது ஆசிரியர்

"உத்தமனார் காந்தியைப்போல மற்றோர்காந்தி
இத்தலத்தில் எம்மிடையே பிறக்கவேண்டும்" - என்று அகிம்சை வழி நின்று, ஒத்த மரமாய் ஓர் இனமாய்த்திரள வேண்டும். என்ற நூலாசிரியரின் ஆதங்கமும் வெளிப்படுகிறது. உள்முகப்போராட்டமும் ஒற்றுமையீனமும் நம்மை எங்கு கொண்டு விட்டுச் சென்றுள்ளது என்பது யாவரும் அறிந்ததே நோகாத வாழ்வையே வேண்டுகிறார். மரபு வழி நின்ற இலக்கிய பாடல்களாக இவை உள்ளன.

கோட்டைக்கல்லாற்று முருகன் மீதும் அம்மக்கள் மீதும் நூலாசிரியர் கொண்டிருந்த ஈடுபாடு இந்நூலில் பெரிதும் பேசப்படுகின்றது.

இந்நூலைத் தேடிப்பெற்று ஒரு வரலாற்று ஆவண இலக்கிய நூலை வெளிக்கொணர்ந்த அவருடைய இலக்கிய வாரிசுகளான மணிசேகரன், திசேரா குடும்பத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். ஸ்ரீ முருகன் திருவருள் நூலாசிரியரின் குடும்பத்தவர் வழித்தோன்றல்கள் அனைவர் மீதும் பொழியும் அவர் விரும்பும் கோட்டைக்கல்லாற்றுப் பெருமக்கள் வாழ்வு சிறக்கவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

-காசுபதிநடராசா-

# பெருவிருட்சமொன்றின்நிழலில்

எனது தந்தை மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் பல காத்திரமான பணியினை ஆற்றியுள்ளார். ஆனால் அதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் பல எம் கையைவிட்டுப் போய்விட்டன. எழுத்தாவணங்கள் ஒன்றும் எம் கைவசம் இல்லை. எனினும் அவர் பற்றிய பதிவுகளை செய்வது காலத்தின் தேவையாக உள்ளது.

**கையெழுத்து சஞ்சிகைகள் :**

இவர் ஆரம்பத்தில் பல கையெழுத்துச் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார். பாலர்மலர், யுவன், இளைஞன், தமிழன், ஈழச்சுடர்.

இதில் ஈழச்சுடர் முக்கியமானது. இதன் ஆசிரியர் எனது தந்தை (வ.ச. சேகரன்). உதவியாசிரியர் காசி ஆனந்தன், நிர்வாக ஆசிரியர் ஆ. பொன்னுத்துரை, எழுத்து வடிவமைப்பு ஆ. தங்கன், இச்சஞ்சிகை ஊரூராகத் தபாலில் செல்லும். அதன் வாசகர்கள் அதனைப் பார்த்துவிட்டு பின்பக்கம் தங்களது குறிப்புக்களை எழுதுவார்கள். இச்சஞ்சிகைகளில் இரா. சந்திரசேகர சர்மா. (யாழ்ப்பாணம்) மதுரை சு.ப. தியாகராஜன் (புசல்லாவ - தற்போது தமிழ் நாட்டில் உள்ளார்.) போன்றவர்கள் தங்களது கருத்துக்களையும், ஆக்கங்களையும் எழுதியுள்ளார்கள். சிறிதுகாலத்தின் பின் ஈழச்சுடரின் பெயரில் மாற்றம் வேண்டும் என்றும் தீவிர அரசியற் கருத்துக்கள் இடம்பெறவேண்டும் என காசிஆனந்தன்

கூறி முரண்பட்டு விலகிச் சென்றுவிட்டார். (இது மட்டக்களப்பு இலக்கிய வரலாற்றில் மறைக்கப்பட்ட ஒரு வரலாற்றுக் குறிப்பு).

**சிறுகதை :**

இவர் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். அச்சில் குறிப்பிட்ட சிறுகதைகளே வெளிவந்துள்ளன. அவைகளை எம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. இயற்கை அனர்த்தத்திற்கு தீனியாகி விட்டனர். அண்மையில் பேரா. செ.யோகராசாவின் முயற்சியினால் மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி சஞ்சிகைகளில் எனது தந்தையின் சிறுகதையில் ஒன்று பரிசுபெற்றுள்ள தகவலும், கதையும் கிடைத்தது. அவருக்கு நன்றிகள். எனது தந்தை உயிருடன் இருக்கும் போது அவரின் உரையாடலின் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

i. எழுத்தாளர் பித்தன் என்ன பத்து, பதினைந்து கதைகள்தானே எழுதினார் என்றார். இக்கூற்றின் ஊடாக இவர் பித்தனுடைய சமகாலத்தவர் என்பதையும், நிறையக் கதைகள் எழுதியுள்ளார் என்பதையும் அறிய முடியும்.

ii. பத்திரிகை ஜாம்பவான் S.D. சிவநாயகம் எமது உறவினர். இவர் சுதந்திரன், தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்தவர். இவ்வரைப் பற்றிக் குறிப்பிடும் போது இவர் எம்மவர் பலருக்கும் நிறைய வாய்பளித்திருக்கலாம் செய்யவில்லை என்றார். அதாவது பத்திரிகையில் வெளிவருவதற்கு நிறையப் படைப்புக்கள் இருந்தும் அதற்கான வாய்ப்புக்கள் குறைவான காலம் அப்போது என்பது எனது கருத்து.

**கவிதை :**

இவர் நூற்றுக்கணக்கான மரபுக்கவிதைகளை எழுதியுள்ளார். பெரும்பாலானவை தமிழ்த் தேசியம் சார்ந்தவை. (பா.உ.செல்லையா, இராசதுரையும் இவரும் நல்ல நண்பர்கள். வந்தாறுமூலையில் இருந்தபோது எமது வீட்டில் தாயக்கட்டை விளையாடி இருக்கின்றார்கள். எமது தாயாரைத் தங்கை என்றே அழைப்பார்). 58 காலவரத்தின் பின்

புத்தரின் கையில் தாமரைப்பூ இருப்பதைக் கண்டு தீவிர தமிழ்ப் பற்றுடன் கவிதை ஒன்று எழுதியதாக இரா.சந்திரசேகரசர்மா ஒரு தடவை குறிப்பிட்டார். சஞ்சிகை முயற்சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்க படைப்பாற்றல் மெல்ல மெல்லக் குறைந்து விட்டதாகவும் சந்திரசேகர சர்மா குறிப்பிட்டார்.

1958ம் ஆண்டு மட்டக்களப்பில் வெள்ளம் ஏற்பட்டபோது எனது தந்தையும் எழுத்தாளர் ஆ.பொன்னுத்துரையும் தமிழ் நாட்டில் இருந்தார்கள். தங்களுடைய சஞ்சிகைக்காக பல எழுத்தாளர்களிடம் பேட்டிகள் எடுத்து புகைப்படங்கள் எடுத்தும் இருக்கிறார்கள். இதில் குறிப்பிடத்தக்கவர் எழுத்தாளர் தமிழ்வாணன். பேட்டியைக் கொடுத்துவிட்டு புகைப்படம் எடுக்க அனுமதிக்கவில்லையாம். தனது ஆயுள் குறைந்துவிடும் எனக்கூறி தானே எடுத்த புகைப்படம் ஒன்றைக் கொடுத்தாராம். 56களில் ஒரு கமராவை சொந்தமாக வைத்திருப்பது பெரிய விடயம். 78 புயலுக்கு முன்பு வரை எமது வீட்டில் இந்தியா, இலங்கை பற்றிய நிறையப் போட்டோக்கள் இருந்தது. அவரே அல்பங்களைச் செய்து புகைப்படங்களைக் கழற்றி எடுக்க முடியாதவாறு ஒட்டி விடுவார்.

இன்றும் ஞாபகம் உள்ள ஒரு படம் இந்தியாவில் ஒரு கடலிலேயே சூரியன் உதித்து பின் அதே கடலிலேயே சூரியன் மறையுமாம் என்று இரண்டு படங்கள் அவருடைய அல்பத்தில் இந்தது. அவற்றைப் பெரிதாகக் கூறினார். இப்போதுதான் தெரிந்துகொண்டேன். கன்னியாகுமரி கடற்கரை என்று இவ்வாறு அரிய பொக்கிசமான நிறையப் புகைப்படங்கள் அவரிடம் இருந்தன.

நன்றாக எமது தந்தை புத்தகங்கள் கட்டுவாராம். (பைண்டிங் செய்வார்) மட்டக்களப்பு பிரதேசங்களிலுள்ள பல நூலகங்களில் பழுதடைந்த புத்தகங்களை எடுத்துவந்து அதனை அழகாக பைண்டிங் செய்து கொடுப்பார். புத்தகத்தில் சிறிய முத்திரை அளவான SB (சேகர் பைண்டிங்) என்ற மார்க் அடையாளமாக ஒட்டப்பட்டிருக்கும். 78க்கு முன்பு பைண்டிங் செய்யப்பட்ட மட்டக்களப்பு பிரதேச

நூலகங்களில் உள்ள புத்தகங்களில் இவ் S.B என்ற அடையாள குறியீட்டை காணலாம். இவ்வாறு கடித உறை அல்பம், ஆட்டோகிராப் போன்ற பலவற்றையும் செய்துவைத்தார். தனக்கு மூன்று ஆண்மக்கள் என்பதனால் பிற்காலத்தில் ஒரு அச்சகத்தை நிறுவும் நோக்குடன் அதற்கான உபகரணங்களை தேடி சேகரித்து வைத்திருந்தார்.

1978 புயலின் பின் எங்கள் வீடு முற்றாக சேதமடைந்து தரைமட்டமாகி விட்டது. நாங்கள் வாழ்வின் பின்னுக்கு தள்ளப்பட்டோம். எங்கள் அழகான குருவிக்கூடு கலைந்தது. விரக்தியின் உச்சத்திற்கு சென்ற எமது தந்தை தான் தேடிய இன்றுவரை தேடமுடியாத பெறுமதி மிக்க ஆயிரக்கணக்கான நூல்களையும் பைண்டிங் உபகரணங்களையும் புத்தக ஈடுபாடு உள்ள எழுத்தாளர், நண்பர் ஒருவருக்கு விற்று விட்டோர் பின்புதான் யார் என அறிந்தேன். தேற்றாத்தீவில் உள்ள க.தா.இராஜகோபாலன் (ஈழத்து பூராடனார்) அவரிடம் அச்சகம் ஒன்றும் இருந்திருக்கின்றது. நான் தேடத் தொடங்கிய போது அவரிடமிருந்த நூல்கள் எல்லாம் கரைந்துவிட்டது.

அந்நாட்களில் பாடசாலை விடுமுறைவிட்டு அடுத்தநாள் அப்பாவினுடைய புத்தக அலுமாரிக் கதவுகள் எல்லாம் எமக்காக திறந்து விடப்படும். பாடசாலை தொடங்குவதற்கு முதல்நாள் மீண்டும் புத்தக அலுமாரிக் கதவுகள் எல்லாம் பூட்டப்படும். இதனைவிட பலரும் அவரிடம் வந்து படிப்பதற்கு நூல்களை வாங்கிச் செல்வார்கள். அவரிடம் ஒரு நூலகமே இயங்கியது. அவரிடம் புத்தகம் பெற்றவர்களில் இன்றும் ஞாபகம் உள்ளவர். எமது சித்தி முறையான லெட்சுமி அக்காச்சியும் ஒருவர்.

அப்பாவின் அறைக்கு நேரே மூன்று படங்கள் எப்போதும் சாமிபடம் போல் இருக்கும். இவர்கள் தன்னுடைய குரு என்பார். டாக்டர் மு.வரதராசன், பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை, தனது தாய்வழி உறவினரான நெல்லிநாத முதலியார் (பாட்டனார்). இதனைவிட அறையின் இருபக்கமும் 3’x 2’ அளவு பெரிய படங்கள் இருக்கும்.

ஒன்று கப்பலோட்டிய தமிழன், வ.உ.சிதம்பரப்பிள்ளை மற்றையது. சுப்பிரமணியபாரதியார். கண்ணாடிச் சோகேசினுள்ளேயும், புத்தகங்கள்தான் இருக்கும். அதனுடன் இராமலிங்க வள்ளலாரின் முழு உருவ சிலையும் அவருடைய நூல் ஒன்றும் இருந்தது. இதனூடாக அவருடைய சிந்தனை வயப்பட்ட தன்மையை உணர்ந்து கொள்ளலாம் என நிர்னைக்கின்றேன்.

புசல்லாவையில் ஆசிரியராக இருந்தபோது ஊர்மக்கள் பலர் கம்பளைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரிடம் சென்று அதிபராக இவரை நியமிக்கும்படி கேட்க அவரும் (ஒரு சிங்கள M.P பெயர் ஞாபகம் இல்லை) நேரே பாடசாலைக்கு இவரிடம் வந்து "அதிபராக உங்களை இவர்கள் கேட்கிறார்கள் நீங்கள் இருங்கள்" என்று கூற "நாளை இவர்கள் வந்து என்னை வேண்டாம் என்று கூறுவார்கள். அப்போது இருக்கவேண்டாம் என்பீர்களா?" என்று கேட்டு ஆளை விட்டால் போதும் என்று மறுத்து விட்டார்.தனது இறுதிக் காலம்வரை எதற்காகவும் அரசியல்வாதியிடம் சென்றது இல்லை. தனது இடமாற்றங்கள் அனைத்தையும் கூட தமிழ் ஆசிரியர் சங்கத்தினூடாகவே செய்து கொள்வார். அதன் தலைவராக இருந்த D.S.K வணசிங்காவும் பொதுச்செயலாளராக இருந்த த.த.மகாசிவமும் இவருடைய நண்பர்கள் அவர்களுடன் தொடர்பு கொண்ட கடிதங்கள் பல என்னிடம் இன்றும் உள்ளது.

எதற்கும் வளைந்து கொடுக்காத தன்மை கொண்டவர். பண்டிதர் செ.பூபாலபிள்ளையின் நூல்களை நூலாக்கும் பணியில் நினைவுப் பணிமன்றம் ஒன்றை அமைத்து செயற்பட்டவர். இக்குழுவில் ஆரையம்பதி சி.க.பொன்னம்பலமும் இருந்துள்ளார். மண்டூர் வடிவேலன் கோவையை மறு பிரசுரம் செய்ய ஏற்பாடுகளை செய்து வாழைச்சேனையை சேர்ந்த கவிஞரிடம் ஒரு கவிதையையும் வாங்கி தயார் செய்தபோது பண்டிதர் பூபாலபிள்ளையின் மருமகன் ஒருவர் முரண்பட தாங்கள் செய்த அனைத்து வேலைகளையும் பண்டிதரின் மகளிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு வந்து விட்டார். பிற்காலத்தில் இவர் பண்டிதரைப் பற்றி எழுதிய கட்டுரையை மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் ஒருவர்

தன்னுடைய பெயரில் தினக்கதிர் பத்திரிகையில் பிரசுரித்து இருந்தார். பண்டிதர் பூபால பிள்ளையும் தானும் அவருடைய வீட்டில் வேலி கட்டிக் கொண்டே தமிழ் படிப்பிப்பாராம். வேலியின் ஒருபக்கம் குருவும் மறுபக்கம் சீடனுமாக கதைத்துக் கொண்டே வேலைசெய்தோம் என்பார். மண்டூர் திருவிழா காலங்களில் குருவுடன் தானும் சென்று புத்தக விற்பனை செய்ததாகவும் அடிக்கடி கூறுவார். சுவாமி விபுலானந்தரின் நேரடி மாணவன் பண்டிதர் என்றும் அவரின் அபிமானத்திற்குரிய நேரடி மாணவன் தான் என்றும் அடிக்கடி கூறுவார். இவர் ஆசிரியராக இருக்கின்றபோது பலமாணவர்கள் வீடு தேடிவந்து நட்புறவுடன் கலந்துரையாடிச் செல்வார்கள். ஆசிரியர் மாணவன் உறவு என்பதற்கு அப்பால் சினேகபூர்வமான உறவாக இது இருக்கும். இவரிடம் கல்வி கற்ற பலர் இன்று நல்ல நிலையில் உள்ளனர். புசலாவை, கலஹா போன்ற இடங்களில் கவிஞர் மருது மனோகரன், கந்தசாமி, கவிஞர் குறிஞ்சி நாடான் செல்லத்துரை, சிவசண்முகம்.

வந்தாறு மூலையில் - கல்விப்பணிப்பாளர் சத்திய நாதன், மக்கள்வங்கி முகாமையாளர் ஆறுமுகம், அவருடைய சகோதர்கள், அதிபர் சுந்தர மூர்த்தி, பாக்கியராசா (பாலு) ஹோல்புறூக்கில் அதிபர் ஆசிரியராக பலபேர் ஜெயராமன், முத்தையா, நடராஜா, சுந்தரம், சந்திரசேகரன், விஜயயேஸ்வரி, சதாசிவம் என்று நீளும் பட்டியல் ஆரையம்பதியில் ஆரம்பக்கல்வி கற்ற த.மலர்செல்வன், பி.ரவிவர்மன் என்று பலர்

இவ்வாறு பல்வேறு முகங்களைக் கொண்டவரை இவ்வாறு பார்க்க முடியும். சுவாமி விபுலானந்தருக்கு சங்கேத மொழியை கற்பித்த குமாரசாமி ஐயரில் தொடங்கிய செங்குந்தரின் இலக்கியப்பாரம்பரியம் சில உச்சங்களை தொட்டு சென்றுள்ளது. மட்டக்களப்பின் முதல் தல புராணத்தை எழுதியவரான நல்.அழகேசமுதலியார், ஈழத்து காளமேகம் என்று போற்றப்பட்ட டாக்டர் சோமசுந்தரம், மட்டக்களப்பு எண்ணெய் சிந்தை பதிப்பித்த தமிழ்மணி, விவேகானந்த முதலியார், மட்டக்களப்பின் முதல் நாவலை எழுதிய ஏரம்பமுதலி, பத்திரிகை ஜாம்பவான் S.D.சிவநாயகம், பொருளியல் ஆய்வாளன் பத்மரஞ்சன், ஆசிரிய சிரோன்மணி செல்வநாயகம், மூலிகை வேந்தன் கண்ணன் வைத்தியர் என்று தொடரும் இவ்விசையில் மட்டக்களப்பின் சிறுகதை

முன்னோடிகளில் ஒருவரான வ.ச.சேகரன் (வ.சந்திரசேகரனும்) இணைந்து கொள்கின்றார். இம்முன்னோர்களில் காணப்பட்ட தலங்கள் மீது பாடல்களைப்பாடும் தன்மையின் வெளிப்பாடாகவும் குமாரசாமி ஐயர் போன்று திகழ்ந்தார். மூன்று ஊர்களின் இணைப்புப்பாலமாகவும் தாமரைக் கேணியில் பிறந்து கோட்டைக் கல்லாற்றில் திருமணம் முடித்து ஆரையம்பதியில் வாழ்ந்து மறைந்தார்.

இவ்வாறு தந்தையை மீட்டிப்பார்க்கும் ஒரு சூழலில் எனக்கு வாய்த்த நல்ல குருவும் தந்தையும் இவரே என்பேன். அடுத்த பிறப்பு என்று ஒன்று இருக்குமாயின் மீண்டும் உமக்கான ஒரு மகனாகவே பிறக்கவேண்டும்.

ச.மணிசேகரன்.



# பின்னிணைப்பு - I

* தந்தையின் தேடலில் சிக்கிய பாடல்

இவ்வாலயத்தைப் பற்றி முன்பு பாடல்கள் பாடப்பட்டுள்ளது. அதனை பாடியவர் யார்? எக்காலத்தில் பாடப்பட்டது என்ற தகவல்களோ? முழுப்பாடல் தொகுதிகளுமோ கிடைக்கவில்லை. ஒரு பாடல் மட்டும் கிடைத்துள்ளது. அதனை தந்தைக்கு கொடுத்தவர் சோதிடர். வே.ஆறுமுகம், அவர்கள் அவருக்கு எமது நன்றிகள். இத்தகவல் உண்மை என்பதனை கல்லாற்று செல்வராசா அண்ணனும் உறுதிப்படுத்தினார். அவருக்கும் வேறு ஒரு பாடலின் நான்கு வரிகள் மட்டும் ஞாபகம் உள்ளது.

### திருச்சிற்றம்பலம்

"சீர் மேவும் பூரணச் சந்திரோதயத்தி னொளி
சேர் முகங்களாறும்
செப்பரிய முத்து நல ரெத்தின மிளைந்திட்ட
செம் பொனாலுயர் மௌலியும்
செய்ய வெண்ணீறிலகு நெற்றியும் திலதமும்
செம்பவள மொத்தவாயும்
சிங்கார மான வடிவேலு முந்நூலும்
சிறந்த விழி பன்னிரண்டும்
செஞ் சிலம்பும் கனக தண்டையும் சின்சிணியும்
திகழ் வரத அபய கரமும்
செக்கச் வானிறமுடைய வள்ளி
தெய்வானை சிறுபுறமுமாய்
சேயன் மிடி தீர்த்தருள மயில் வாகனத்தின்
மிசை தெரிசனம் தந்தருளுவாய்
செப்பிய தென் கயிலை கல்லாறு தனிலுறையும்
ஜெய கந்த சாமி வேளே

# பின்னிணைப்பு - II
## முதுதமிழ்ப்புலவர்
### பண்டிதர். செ.பூபாலபிள்ளை அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**பிறப்பிடம் :-** 'அலைசாயும் வாவிகடல் இரண்டும் சேர்ந்து அரவணைத்துத் தாலாட்டும் ஆரையூர்' எனப்படும் ஆரைப்பற்றைக்கிராமம் இது மட்டக்களப்புக்குத் தெற்கே நான்கு மைல் தொலைவில் உள்ளது.

**தாய், தந்தை :-** தாய், சம்புநாதவன்னிமை மகன் சீனித்தம் பித்தலைமை ஆசிரியரது மகள் அன்னபூரணி அம்மாள், தந்தை. வைத்தியர் கணபதிப்பிள்ளை மகன் செல்லப்பா (சிறுவியாபாரி)

**பிறப்பு:-** சுபகிருது ஆனி 19ல் (2.7.1902) தாய்க்குத் தலைம கனாகப் பிறந்தார் இளமைக்கல்வி ஆரையம்பதிச் சைவ வித்தியாசாலையும், காத்தான்குடி அரசினர் பாடசாலையும்,

**இளமைக்குணம்:-** சுட்டித்தனமும் குறும்புத்தனமும் உண்டு. ஆனால் பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படிவான நற்குணம் உண்டு. "சிறுபிள்ளைத் திருவிழா" போன்ற விளையாட்டுக் களையே விரும்பி விளையாடி மகிழ்வார். எக்காலத்தும் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் காணப்பட்டன. சமய ஒழுக்கமும் சமயத்திருப்பணிகளில் ஆர்வமும் எக்காலும் விரவி நின்றன. ஊஞ்சற்பாட்டு நாட்டுக்கவிபோன்ற வற்றைச் சார்ந்த புதுக் கவிதைகளை இயல்பாய் அமைத்துப்பாடுவார்.

**ஆசிரியரானமையும் ஆசிரியச் சேவையும்:-**

1. ஐப்பசி 1918 - ஐப்பசி 1922 காத்தான்குடி (அ.த.க.பாடசாலை)
2. கார்த்திகை 1922 - புரட் 1924 நிந்தவூர் (அ.த.க.பாடசாலை)

3. ஐப்பசி 1924 - புரட்டதி 1926 கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி

4. 1.10.26 - 20.08.28 திருகோணமலை இந்துக்கல்லூரி

5. 21.08.28 - 31.08.28: மட்டக்களப்பு காரைதீவு சைவப்பாடசாலை

6. 17.01.29 - 18.01.30 : கொழும்பு மூர்வீதி அனிபா (பாடசாலையில் தலைமை ஆசிரியர்)

7. 01.04.30 - 28.2.45: மட்/அர்ச்... செபஸ்தியார் பாடசாலையில் தலைமை ஆசிரியர்

8. 1.03.45 - 30.4.46: அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர்.

9. 1.5.46 - 3.7.62: மட்/ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர்.

3.7.62ல் ஓய்வு பெற்றார்.

1926ல் சுவாமி விபுலானந்த அடிகளின் சீடனாகித் தமிழ், இலக்கிய, சமய அறிவு விருத்தியடைந்தார். இறுதிக்காலம்வரை சுவாமியின் உத்தம மாணவனாக வாழ்ந்தார்.

**திருமணம்:-** 15.1.1937ல் நடைபெற்றது.

மட்டக்களப்பு பட்டினத்தை அடுத்த கல்லடியில் அரசாங்கத் தலைமை எழுது வினைஞர் திரு.ப.சுப்பிரமணியம், ஸ்ரீ ரங்கம் தம்பதிகளின் ஒரேமகள் கமலாவதி வாழ்க்கைத் துணைவியாக வந்தடைந்தார். மகப்பேறு 1) பூ.மங்கயகரசி (மட்/ சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணி புரிகிறார்)

2) பூ.குழந்தைக்குமரன் (வாழைச்சேனை, கிழக்கிலங்கைக் காகிதக் கூட்டுத்தாபனத்தில் மின்சாரத்துறை மேலாளராகப்பணி புரிகிறார்) ஏனைய எண்மரும் பள்ளிப்பருவத்தினர். மொத்தத்தில் நான்கு

ஆண்மக்களும் ஆறு பெண்மக்களுமாகப் பத்துச் செல்வங்களின் பேராளன்.

**தாய்தந்தையர் பிரிவு:-** தனது 12ம் வயதில் தாயையும் 31ம் வயதில் தந்தையையும் இழந்தார்.

**மறைவு:** பிலவங்க வருடம் சித்திரை 13ம் திகதி (26.4.67) உன்னிச்சை வயலில் 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரிந்து' மகிழ்ந்திருந்த போது குருதிபிணையச் சரிந்து பிரிந்தார்.

**தொண்டுகள்:-**

i. ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில், தலைமைத் தமிழ்ப்பண்டி தராகவும், சைவசமய விரிவுரையளராகவும் பணிபுரிந்தார்.

ii. விடுமுறைக்கழகங்களைக் கூட்டு வித்தார்.

iii. திருகோணமலை முதல் மட்டக்களப்பு வரை பாதயாத்திரை நடாத்தி மட்டக்களப்பில் ஒரு ஆசிரிய பயிற்சிக்கல்லூரி நிறுவக்கோரி அரசினருடன் வாதிட்டு வெற்றி கண்டார்.

iv. சமயவளர்ச்சிக்காகப் பாதயாத்திரைகளை நடாத்தினார்

v. தனக்குக்கிடைத்த பணமுடிப்புக்கள், நன்கொடைகள் அனைத்தையும், சுவாமி விபுலானந்தரால் நிறுவப்பட்ட குருகுலத்திற்கு வழங்கினார்.

vi. உத்தியோகத்தினின்றும் ஓய்வு பெற்றபின்பு ஒருமுழுநேர விவசாயியாக மாறி விவசாயத்தில் ஈடுபட்டது மன்றி, விவசாயத்தின் சிறப்பையிட்டுப் பேசியும், எழுதியும் வந்தார்.

vii. கோயில்களில் புராணம் பாடிப் பயன் கூறுவதும், அந்தப்பழம் பண்பைப்பயிற்றுவதும் சமயாசாரங்களைப் பரப்புவதும், இவர் 1918ம் ஆண்டு முதற் கொண்ட பொதுப்பணியாகும்.

**சிறப்புக்கள்:-**

* 3.10.27ல் யாழ்ப்பாண ஆரியதிராவிடபாசா விருத்திச்சங்க பண்டிதப் பரீட்சையில் சித்தியடைந்தார்.
* 14.5.34ல் சுகாதாரக்கல்விப் பயிற்சியிற் சித்தியடைந்தார்.

* 1942ல் கல்லடிக் கிராமச்சங்க உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 'பயிற் செய்கைக்கும் மக்கள் குடியேற்றத்திற்குமாக, அரசினரிடம் கோரிக்கை விடுத்து "கல்லடி வேலூர்" கிராமத்தை அமைத்தற் கருத்தாவானர்.
* 1943ல் சிறந்த விவசாய சுலோகங்களை எழுதி அமைத்த தற்காக அரசாங்கப் பரிசுகிடைத்தது.
* 1953ல் வெண்காயச் செய்கைப் போட்டியில் பரிசு பெற்றார்.
* 5.6.54ல் ஒரு முறையும் 19.2.55ல் ஒருமுறையும் சிறந்த ஆடுவளர்ப்புக்கான பரிசில்களைப் பெற்றார்.
* 1955ல் மட்டக்களப்பு அருள் நெறித் திருக்கூட்டத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேற்படி கழகத்தின் மூலம் சைவசமய வகுப்புக்கள், சைவ மகா நாடுகள், சைவசமயப் பிரசாரங்கள், ஆலயங்களில் புராணங்கள் படிப்பும் பயன் சொல்லுதலும், வளர்ந்தோர் சமய வகுப்பு முதலிய பணிகள் நடை பெற ஏதுவாய் இருந்தார். பல கூட்டுப்பிரார்த்தினைச் சங்கங்களை ஆங்காங்கு நிறுவியும், பாதயாத்திரையை ஆரம்பித்தும் மாதம் தோறும் நடப்பித்தும் வந்தார்.

* 1955ல் ஆகில இலங்கை இந்துமாமன்ற அங்கத்தவரானார்.
* 1966ல் இருந்து மேற்படிமன்ற உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.
* 1957 - 1960வரை சைவசித்தாந்த மகாசமாஜ பிறநாட்டு ஆலோசனைக்குழு அங்கத்தவராகப் பணியாற்றினார்.
* 1956 - 1966வரை இந்து சமயபாட உதவிப் பரிட்சகராகக் கடமைபுரிந்தார்.
* 1962ல் பேராசிரியப் பதவியிலிருந்த ஓய்வு பெற்றபோது, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் பொற்கிளியும் பெற்றார்.
* 6.11.1964ல் கல்விப்பகுதியினரின் பாடப்புத்தக ஆலோசனைக் குழுவில் ஒருவராக நியமனம் பெற்றார்.
* 1966ல் முத்தமிழ்கலாமன்றம் பொன்னாடை போர்த்தி, **முதுதமிழ்ப்புலவர்**, பட்ட மளித்து பொற்பதக்கம் வழங்கிக் கௌரவித்தது.

* 1966ல் இருந்து சர்வமத காங்கிரஸ் அங்கத்தவராகப் பதவி வகித்து வந்தார்.

**வானொலிப்பேச்சு:-** இலங்கை வானொலியில் சமயச் சொற்பொழிவுகள், செய்தும், கவியரங்குகளில் பங்கு பற்றியும், கிராமிய இலக்கியம், நாட்டுப்பாடல், ஆதியன பற்றிப்பேசியும் வந்துள்ளார்.

**கட்டுரைகளும் இலக்கியங்களும் வெளிவந்த பத்திரிகைகள்:**

| | |
|---|---|
| ஆத்மஜோதி | வீரகேசரி |
| ஆனந்தசாகரம் | சுதந்திரன் |
| தினகரன் | தினபதி |
| இளம்பிறை | ஈழகேசரி |
| இந்து இளைஞன் | ஈழச்சுடர் |
| கமத்தொழில் விளக்கம் | யாழ்ப்பாணன் |
| சிவாய வாசி | கலைப்பூங்கா |
| கலைச்செல்வி | |

**யாத்த நூல்கள்:-**

1. மண்டூர் வடிவேல் முருகன் இரட்டைமணிமாலை
2. கதிர்காம வடிவேலவர்
3. யாழ்நூல் தந்தோன்

**வெளிவர இருப்பவை:-**

1. ஊழவர் கை நூல் (இலக்கியம்)
2. திருமுருகன் திருவிளையாடல்
3. விபுலானந்த அறிவுரை

**தொகுப்பு. வ.சந்திரசேகரன்**

# பின்னிணைப்பு - III

1949 பாரதி மலர் -1, இதழ் -7 இல் வந்தது ஆறுதல் பரிசு பெற்றகதை

## மன்னிப்பா! V.சந்திரசேகரன்

நான் பிரின்ஸ்பல் அறையை விட்டு வெளிவந்ததைக் கண்ட சாலிஸுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனிலும் கூடிய மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டதென்பதை அவன் உணர்ந்தால் தானே!

"என்ன குமார்? காயா? பழமா?" என்றான். "குமார் கால்வைத்தால் குதிரைக்கொம்பாகவா போய் விடும்" என்றேன் இதிலிருந்தே அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சாலிஹு விர்ரென்று பறந்து சென்றாள். அவன் போன போக்கிலேயே சரணுக்குத் தந்தி கொடுத்துவிட்டு வரத்தான் போகிறான். என்று தெரிந்து கொண்டேன். நானும் என் அறைக்குச் சென்று புதியதோர் கட்டில் கொண்டுவந்து போட்டு ஆகவேண்டிய ஒழுங்குகளைக் கவனித்தேன்.

சரண் என்பது திருகோணமலையிலுள்ள ஒரு கம்பெனிக்குமாஸ்தா எங்களுக்குச் சற்றுப் பரிச்சயமானவர்தான். அவர் எங்களுக்கு மாற்றலாகியிருந் தமையினால் என்னையும், சாலிஹையும் ஒரு ஜாகை பார்த்..... தரும்படி எழுதியிருந்தார். உண்ண உணவு கிடைத்தாலும், உடுக்க உடை கிடைத்தாலும், உறங்க வீடு கிடையாத இந்தக் காலத்தில், காலேஜ் மாணவர்களாகிய எங்களுக்கு வீடு தரயாரும் முன் வரவில்லை. எனவே இருவரும் செய்த யுக்திதான் காலேஜ் பிரின்ஸிபலின் உத்தரவு பெற்று எங்கள் அறையில் அவருக்கும் ஒரு இடம் கொடுப்பதெனத் தீர்மானித்தோம். இதற்காகத்தான் நான் முதலில் பிரின்ஸிபலின் உத்தரவு பெற்றுக் கொண்டுவந்தேன்.

இடையில் சாலிஹூம் போஸ்ட் ஆபீஸிலிருந்து வந்து சேர்ந்தான் இருவரும் அறையை ஒழுங்கு செய்துவைத்து விட்டு உலாவப் புறப்பட்டோம். சரணுக்கு நாங்கள் இடங்கொடுக்கச் சம்மதித்தது அவர் ஆபீஸ் குமாஸ்தா என்பதற்கல்ல, அவர் ஒரு சிறந்த எழுத்தாளனும் கூட பிரபல இந்தியப் பத்திரிகைகளிலும், நம் நாட்டுப் பத்திரிகைகளிலும் எழுதிப் பரிசுகள் பெற்ற ஒருவர். அவர் எங்களுடனிருப்பதால் எங்களுக்கே ஒருதனி மதிப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? அன்றியும் அவரது எழுத்துவனமையும் கலையனுபவமும் எம் மைச்சார்ந்து நாமும்

ஒரு சின்ன எழுத்தாளனாகவாவது வரமாட்டோமா? இதையெல்லாம் உத்தேசித்துத்தான் காரியத்திலிறங்கினோம்.

அடுத்த நாள் காலை ரயிலில் சரீண் வந்து சேர்ந்தார். எங்களுடன் இருக்கையும் எங்கள் ஹாஸ்டலுக்குப்பக்கத்திலுள்ள மணி ஹோட்டலிற் சாப்பாடுமாகக் காலந்தள்ளினார். அவர் சில சமயங்களில் எங்கள் கிளா ஹூக்கு வருவார். "பிறீ" பீரியட் ஆக இருந்தால் எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொள்வோம். ஏதாவது சிலருசிகர சம்பவங்களைச் சொல்வார். அதிலிருந்து அவருக்கு, பேச்சு வன்மையும் உண்டென்று உணர்ந்து கொண்டோம். எனவே அவ்வாரம் எங்கள் காலேஜில் நடைபெறவிருந்த மதுவிலக்கு இளைஞர் மகா நாட்டிற்கு அவரையும் அழைத்தோம். அவரும் அதற்கு இணங்கினார்.

"எதிர்கால உலகத்தின் அஸ்திவாரத் தூண்களாகிய இளைஞர்களே! மது என்னும் கொடிய அரக்கனை நம் நாட்டினின்றும் விரட்ட உம்போன்ற ஏறுகளாற் தான் முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் முன் வந்து மது விலக்குக்காகச் சத்தியாகிரகம் செய்தாலன்றி நம் நாடு சுபீட்ச மடையாது. மது விலக்குக்காக நாம்தோளோடு தோள் கோர்த்துத் தொண்டாற்ற வேண்டியது மிக மிக முக்கியமானதொன்று, வீறுபெற்று விழிப்படைந்து மதுவரக்கனை நாட்டை விட்டு ஓட்டுவோம்" என்றெல்லாம் உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றினார்.

இதனால் எங்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் அவரைப்பற்றி ஒரு நல்லெண்ணம் ஏற்பட்டு விட்டது, என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டம் கலைந்ததும் எல்லோரும் ஹாஸ்டலுக்குப் போனோம் அங்கு சென்றதும் அவர்தனக்கு எங்கோ தேநீர் விருந்தொன்று இருப்பதாகக் கூறி வெளியே சென்னார்.

சாய்வு நாற்காலியில் இருந்தவாறே அவர் வைத்துச்சென்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டிக்கொண்டிருதேன். என்ன குமார்? சரண் எங்கே?" என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தான் சாலிஹ், ஆளுக்கொரு புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தோம். 'குமார்? இது என்ன?" என்று ஒரு கவரை நீட்டினான். கவரின் ஒருமுலையில் "இரகசியம்" என்று ஆங்கிலத்திற் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அது சரணுடைய எழுத்தென்பது எனக்குப் புரிந்து விட்டது. தபால் கூட சரணுக்குதான் வந்திருந்தது. 'சரி! என்னதான் இரகசியம் பார்ப்போமே' என்று கையிலிருந்ததைப் பறித்தான் சாலிஹ்.

பிரிய சரண்!

இவ்வளவு ஆ'டடபூதித் தனமாக நீங்கள் இருப்பீர்களென்று எனக்கு இதுவரை தெரியாது. இருந்தும் தாங்கள்: இவ்வளவிற்குப் பிறகு இனுயும் பராமுகமாயிருப்பது நியாயமற்றது என்று எனக்குப்படவே நண் பன் என்ற ஹோதாவில் என் கடமையைச் செய்து வைக்கின்றேன்.

நேய! கமலா ஒரு பாவமும் அறியாதவள், அறுபது வயதுக் கிழவன் பதினாறு வயது யுவதியை மணப்பது நியாயமற்றது என்ற உமது சீர்திருத்த மேடைப் பிர சங்கத்தை நம்பி, தன் உ-ணர்ச்சிக்கு அடிமையாகித் தன் கணவனைக் கூட வெறுத்து உன்னையே சதமென்று வந்தது அவள் பிழையல்ல. இருந்தும் ஆறுமாதக் கர்ப்பிணியாகிய அவளை நடுத்தெருவில் "விபசாரி" என்று சந்தி சிரிக்க வைத்து விட்டு விமலாவை மணம் செய்வதாக அவள் தந்தையிடம் கூறி இரகசியமாக விவாகப்பதிவு கூட வைத்துவிட்டு ஒரு பாவமும் அறியாதது போல நடிப்பது நியாயமல்ல.

நடுத்தெருவிற் பிரக்ஞையடைந்து கிடந்த கமலா அனாதையாக ஆஸ்பத்திரியிற் சேர்க்கப்பட்டிருக்கிறாள். போனது போக அவள் வயிற்றிற் பிறந்த உனது குழந்தை வரதனையாவது வந்து ஏற்றுக்கொள்ளுங்கள் இது உன் கடமையென்பதை நான் வற்புறுத்திக் காட்ட வேண்டிய அவசியமில்லை. இந்தத் தபாலையும் நீர் ஏற்கமறுத்தால் இதுவே நமது நட்பின் இறுதி.

நணபன்
யோகம்

சாலிஹ்! என்றேன், 'ஏன்குமார்? மோசம்போனது நாம்தான் இதற்கு முடிபு ஒன்று விரைவிற் தேடியாக வேண்டும், என்றான் ஆத்திரத்துடன் எனக்கு உடம்பை என்னவோ செய்தது, சொல் ஒன்று செயல் ஒன்றாகும் இவர் பான்மையைக் கண்டு உள்ளம் கொதித்தது. இவ்விதம் ஹிம்சிக்கப்படும் சகோதரிகள் மீது எனக்கே ஓர் பச்சாத்தாபம் ஏற்பட்டது. இதுதான் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று கொள்ளும் உத்தமரது பான் மையோ? மற்றோர்க்கு நல்வழி காட்டுகிறோமென்று இருட்டில் போய் முட்டிக் கொள்ளும் உ-வர்ந்த நோக்கமோ? "தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்த பிறர் குறுகும் வெங்குறை தீர்க்கிப்பார் விழுமியோர்." என்ற விளக்கமோ? என்றெல்லாம் என் உ-ள்ளம் பொருமியது.

இரவு மணி எட்டாயிற்று, எட்டரையுமாயிற்று 'சரண் வந்த பாடில்லை. ஹோட்டல் பையன் கூட ஒரு தரம்வந்து "விசிற்" பண்ணிவிட்டுப் போனான். அறைக்கதவைச் சாத்தி விட்டுப்படுத்துக் கொண்டேன். கதவு தடாரென்ற சப்தம் கேட்டுக் கண்விழித்தேன். சரண் அவரது கட்டிலிற் கிடந்தார். என்ன என்றுமில்லாதமாதிரி வந்ததும் வராததுமாக உடுப்புக் கூட மாற்ற நேரமற்று படுத்துக் கொண்டீர்களே? என்றேன். பேசவேயில்லை, லைற்வெளிச்சத்தில் முகத்தை உற்று நோக்கினேன், சந்தர்ப்பம் ஒன்றியதாய் ஏதோ ஒரு வாசனை என் முகத்திற் தட்டியது, நான் திணறிப்போனேன்.

பேசாது படுக்கையை அடைந்தேன். அவரது பட்டத்தையும், பதவியையும் நம்பி மோசம் போனோமே என்று என்மனம் எண்ணாத தெல்லாம் எண்ணிற்று. "யாவர் ஒருவர் ஒருவர் தம் உள்ளத்தை தே......... மையுடையவர்" என்ற சமரணது வாக்கு ஞாபகத்திற்கு வந்தது இவ் குடியர் என்ற வி'யம் ஒருகால் பிரின்ஸிபலுக்குத் தெரிந்தால் அப்புறம் என்கதி என்ன ஆகுமோ? காலேஜையே விட்டு நம்மையும் வெளியேற்றி விடுவாரோ? இந்த மயக்கத்திலே அவரை எங்கேயாவது கொண்டு போய் ஒரு நண்பாது வீட்டில் விட்டு வந்து விடுவோமா? சேச்சே! அப்படியார் இருக்கிறார்கள்? என்னெல்லாம் எண்ணியவாறே கண்ணயர்ந்தேன்.

குமார்! என்ற அதட்டல் கேட்டு விழித்தேன் வைஸ் பிரின்ஸிபல் நின்ற நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இது என்ன இந்தப்பிணம்? இவனைத் தானா நல்லவன் என்றாய் என்று அதட்டினார். 'மன்னியுங்கள் ஸார்! இப்படியாகு மென்று நான் எதிர்பார்க்க வேயில்லை, 'என்றோன் இந்த ஆரவாரம் கேட்ட சாலீஹ் அங்கு வந்தான். அந்தக் கணத்திலேயே அவனுக்கு வி'யம் புரிந்து விட்டது. 'இதை நாங்கள் சுத்தம் செய்து விடுகிறோம் ஸார்! மன்னியுங்கள்' என்றான் அவன், 'மன்னிப்பாம் மன்னிப்பு, ஊரளப்பை யெல்லாம் முன்பின் அறியாமலேயே அள்ளிப் போட்டுக் கொள்ளுகிறது. அப்புறம் மன்னிப்பாம் கத்தரிக்காயாம்' என்று உறுமியவாறே "கம்ஹியர் குமார்" என்று கட்டளையிட்டு நகர்ந்தார். அதைக்கவனிக்கும் படி சாலிஹுக்குச் சமிக்ஞை செய்து விட்டு அவரைப் பின் தொடர்ந்தேன்.

அவர் நேரே தனது ரூமுக்குப் போனார் 'இப்படி உட்கார் என்றார்' சாந்தமாக, என்னை நிமிந்து பார்த்த அவர் "ஏன் அழுகிறாய்?

இவைகலெல்லாம் மனித சமூகத்தில் நடை பெறாதவையல்ல. இது வி'யம் பிரின்ஸிபல் அறிந்தால் என்ன நடக்குமென்று உனக்குத் தெரியாதா? என்றார். 'ஸார்! அவர் குடிப்பவர் என்று எனக்குக் கனவிலும் தெரியாது. தெரிந்திருந்தால்'........ 'அது சரி குமார்! அவனை எது விதத்திலும் வெளியிலே ஜாகை பார்த்துக் கொண்டு போகச் சொல். இது உனக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும். இது வி'யத்தை வெளியில் விடாதே. பிரின்ஸிபல் அறிந்து விடுவார். அன்றியும் நமது காலேஜுக்கே அவமானமில்லையா? சரி! போ காலை வேளைக்குள் இடத்தைச் சுத்தஞ்செய்து விடுங்கள்' என்றார். நேரே அறைகுச் சென்றேன். அங்கே சாலிஹ் அவர் வாந்தியெடுத்ததைச் சுத்தம் செய்து கொண்டு நின்றான். பின் இருவரும் அவரைத் தூக்கிக் கட்டிலிற் கிடத்தினோம். ஒன்றுமறியாதவர்கள் போல் அவரவர் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டோம்.

காலையில் நானும் சாலிஸும்நேரே வடிவேலிடம் சென்றோம். வடிவேல் என் உடன் மாணவன் ஊர் முழுவதும் அவருக்கு நன்கு பரிச்சயம். இதனால் அவரது உதவியோடு ஜாகை தேடிப்புறப்பட்டோம். எங்கெல்லாமோ அலைந்து கடைசியாக நூறு ரூபாய் லஞ்சம் கொடுத்து இருபத்தைந்து ரூபாய் வாடகையில் ஒன்றை அமர்த்திக் கொண்டோம் மணியும் பன்னிரண்டானதினால் வடிவேலின் வீட்டிலேயே மத்தியானம் எங்களுக்கு விருந்து நடந்தேறியது. இரண்டு மணி சுமாருக்குக் ஹாஸ்டலுக்கு வந்தோம்.

நேரே என் அறைக்குச் சென்றேன் அங்கு சாய்வு நாற்காலியிற் சரண் படுத்திருந்தார். கையில் முதல் நாளைய இரகசியக்கடிதம் காணப்பட்டது. நாங்கள் பார்த்து விட்டதை அவர் அறிந்துவிட்டாரென்று அவர் முகமே சான்று பகன்றது. முகம் பேயறைந்தது போற் காணப்பட்டது. குமார்! என்றார் தழதழத்த குரலில் எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. நன்றாக உதைத்து வெளியே துரத்தி விடுவோமா? என்று கூட எண்ணினேன். சே! இது என்ன மடமை என்று பேசாதிருந்தேன். 'அதிகம் பிரயாசையோ?' என்றார், 'தெய்வச் சோதனைக்கு நாம் ஆளாகாதிருக்க முடியுமா?' என்றேன் நான். 'இல்லைக்குமார்! சிறிதுதான் குடிப்பது வழக்கம் குடிக்காமல் என்னால் ஒரு எழுத்துக்கூட எழுதமுடிவதில்லை. அன்று விருந்தல்லவா?

அதனாற்தான் சற்றுக் கூடிவிட்டது. பிரயாசை உண்டாக்கி அதற்கு மன்னியுங்கள். "அப்போ நீங்கள் அன்று சென்றது தேநீர் விருந்திற்கல்ல. மது விருந்திற்குத்தான் என்று சொல்லுங்கள்" என்று கூறிக் கொண்டே வந்தான் சாலிஹ் ஸார்! மாதம் இருபத்தைந்து ரூபாயில் ஜாகை ஒன்று கிடைத்திருக்கிறது என்றான். அப்படியானால் உங்களைவிட்டு உண்மையாகவே பிரிகின்றேனா? உங்கள் வாழ்விற்கு பொறுக்கமுடியாத அபசாரமொன்று செய்து விட்டனே என்றார் துக்கத்துடன்.

என்ன ஸார்! கண் முக்குத் தெரியாமல் குடித்து விட்டு அபசாமாவது! சுண்டைக்காயாவது: என்று முணு முணுத்தான் சாலிஹ். ஏன் சாலிஹ்! ஒருவரது மனத்தைப் புண்ணாக்குகிறாய் என்றேன் நான் இரகசியமாக, இது அவரது காதுகளில் விழுந்ததோ என்னமோ? சட்டென்று எழுந்தார் என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழத் தொடங்கினார். என்னை மன்னித்து விடு குமார்! என்றார். ஸார்! ஸார்! இது என்ன திருவிளையாடல். விடுங்கள் என் காலை என்று மெதுவாக அவரைத் தூக்கி உட்கார வைத்தேன். விம்மிக் கொண்டேயிருந்தார். அவரது பரிதாப நிலையைக் கண்ட எனக்குக் கூட துக்கம் நெஞ்சையடைத்தது.

ஸார்! இனிக் குடிப்பதேயில்லை என்று சங்கற்பம் செய்து கொள்ளுங்கள். அதுவே எங்களது மன்னிப்பாக இருக்கட்டும், என்றான் சாலிஹ் பேச்சை ஆமோதிப்பதுபோல் எதிர்க்கோவில் மணிடாண், டாண் என்று ஒலித்தது. அவர் தமது இருகரங்களையும் கூப்பியவாறே மணியோசை வந்த திக்கை நோக்கினார். மணிபின்னும் டாண்-டாண் என்று அடித்து ஓய்ந்தது.

# பின்னிணைப்பு - IV


ANBUMANI
R. NAGALINGAM (SLAS)
Retd. Senior Assistant Secretary
(PARWATHY AHAM, ARAYAMPATHY - 1)

18 Nalliah Road,
BATTICALOA.

தமிழ்மணி இரா. நாகலிங்கம் (அன்புமணி)
முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளர்
பார்வதி அகம் ஆரையம்பதி - 1.

18, நல்லையா வீதி,
மட்டக்களப்பு.


26/7/98

அன்பு சகோதரிக்கு

உங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் அனுப்பிவைத்த வெளியீ
களுக்கு நன்றி. அவற்றை உரியமுறையில் பயன்படுத்துவேன்.
தங்கள் வாழ்க்கையின் அந்திப் பொழுதில் கொண்டாடப்பட்டு
பற்பல துறைகளுடனான தொடர்புகளை அறிய முடி
கின்றது. மிகவும் தெரிகின்றது: தொண்டிலேயே இதுவே பலரது விருப்
பமாக உள்ளது. அதனால் தாங்கள் 71 வயதுவரை வாழ்ந்துவிட்டீர்கள்.
இறைவன் அருளுடன் நீண்டகாலம் இன்னும் பல வருடங்கள்
வாழ்வீர்கள். இறைவனுக்கு நன்றி சொல்கிறோம்.

தங்கள் கட்டுரையில் குறிப்பிட்ட தங்கள் பெற்றோர்
சகோதரர் எல்லோரும் பெருந்தகைகள் நல்லவர்கள். அவர்களின் நல்ல
பாக்கியங்களே பெரும் பேறு என்று நினைக்கிறேன்.

தங்கள் அறிவியல் புயல் / வெள்ளம் தொல்லைகளிலும்
தப்பித்தமை மிகவும் பாராட்டுக்குரியது. அவ்வப்போது தங்கள்
காலத்தில் தங்கள் உதவியான பணிகளை செய்திருக்கிறீர்கள்.
தங்கள் வாழ்க்கையில் அனைத்துப் பணியை தொடர்ந்து செய்திருக்கிறீர்கள்.
பலவில் உங்கள் பெயர் நிலைத்து நிற்கும் பெருமை பெறுவது.

தங்கள் மனநிறைவுடனும், நீடித்த சுகத்துடனும்
வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

குறிப்பு:



வன்னமணி சந்திரசேகரன் (1927 -1999)

தாமரைக் கேணியில் பிறந்து, கோட்டைக் கல்லாற்றில் கரம்பிடித்து ஆரையம்பதியில் வாழ்ந்து மறைந்தவர். வ.ச.சேகரன் என அறியப்பட்டிருந்தாலும் இயற்கை அழிவுடன் அவர் படைப்புக்கள் கரைந்ததன் பின்னாளில் அவர் சருகுகள் மறைத்த காயாய் உச்சிக் கொப்பில் நின்றார். இதற்கு அவரின் தீவிர போக்கும், குழுசார்ந்த வட்டத்துள் செயற்படாமையும் ஒரு காரணமாயிருக்கலாம்.

இது அவரின் இறுதிக்கட்ட ஆசையுள் முளைத்த வரிகள்.